பககங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 10 | வியாழக்கிழமை | (24.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 188




## ஐ.தே.கட்சி தேசியப்பட்டியல் எம்.பி.

# அலிஸாகீர் மௌலானா



# திடீர் இராஜிநாமா

## கருணாவை கொழும்பிற்கு கூட்டிச்சென்றதே காரணமாம்

(நமது நிருபர்)

**ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகீர் மௌலானா தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டு.அம்பாறை மாவட்டத் தளபதி கருணாவை பாதுகாப்பாகக் கொழும்பிற்குக் கூட்டிச் சென்றவிடயம் சூடுபிடித்து பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நேற்று இராஜிநாமாச் செய்துள்ளார்.**

அலிஸாகீர் மௌலானா தனது திடீர் இராஜிநாமாக் குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கும் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

அலிஸாகீர் மொலானா தனது இராஜிநாமா முடிபு குறித்து அக் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணாவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது கருணாவை மனிதாபிமான அடிப்படையில் மட்டக்களப்பில இருந்து கொழும்பிற்குக் கூட்டிச் செல்வதற்கு நான் உதவி செய்தேன். இதனால் தற்போது எழுந்துள்ள சர்ச்சை காரணமாக நான் சார்ந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியினதும் அதன் "தலைவர் ரணில்' விக்கிரமசிங்காவினதும் நலன்கள் பாதிக்கப்படக் கூடாதென் பதற்காகவே எனது சுயவிருப்பின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக் கழக ஊழியர்சங்க போராட்டத்திற்கு இணக்கமான தீர்வு

### நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டுவந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இணக்கமான தீர்வு ஏற்பட்டுள்ளது.இது விடயம் தொடர்பான கூட்டம் ஒன்று துணை வேந்தர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், தமிழீழ மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலின் போது பதிவாளரின் வெளிநாட்டுப் பயணக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைக்கான தீர்வு நாளை மறுதினம

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரவிகருணாநாயக்க எம்.பியை கைது செய்ய பொலிஸார் முயற்சி

### அவரது வீட்டில் பெரும் வாக்குவாதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரவிகருணாநாயக்காவைக் கைது செய்யும் முகமாக பாராளுமன்ற வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு பொலிஸார் நேற்றுச் சென்றனர்.

எனினும் பொலிஸார் உரிய நீதிமன்ற ஆணையைத் தம்முடன் எடுத்துவரவில்லை என்ற காரணத்தைக் காட்டி ரவிகருணாநாயக்கா பொலிஸாருடன் வாக்குவாதப்பட்டார் இதனால் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்பீரிஸ் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரியா உட்பட பலர் முக்கியஸ்தர்கள் அங்கு விரைந்து சென்று நிலைமையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவைக் கூட்டிச் சென்றதில் ஐ.தே.கட்சிக்குத் தொடர்பில்லை

### கட்சியின் அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகீர் மௌலானா புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணாவைக் கொழும்பிற்கு அழைத்துச் செல்வதற்கு உதவிய சம்பவம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்திற்கோ அல்லது கட்சியின் உறுப்பினர்களுக்கோ அவர் தெரியப்படுத்தவில்லையெனவும் இதில் அவர் மட்டுமே சம்பந்தப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணா கொழும்பிற்குத் தப்பிச் செல்லத் தான் உதவியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான அலிஸாகீர் மௌலானா தெரிவித்திருந்தமையால் எழுந்துள்ள சர்ச்சையையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வளாக மாணவர்களின் போராட்டம் தொடர்கிறது

### துணைவேந்தர் அங்கு செல்வார்

(யாழ்ப்பாணம்)

யாழ.பல்கலைக் கழக வவுனியா வளாக மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

மாணவர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காகச் சென்ற வவுனியா வளாக முதல்வர் திருமதி ஆர்.மகேஸ்வரனை மாண்வர்கள் நிர்வாகக் காரியாலயத்திற்குச் செல்ல அனுமதிக்கவில்லை.

இதேவேளை அங்கு சென்ற தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் மாணவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன், மாணவர்களின் தேவைக்காக வான் ஒன்றை கொள்வனவு செய்து வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்தார். அத்துடன் வவுனியா வளாகத்தின் வளர்ச்சிக்காக தமிழரசுக் கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரினதும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செல

(12ஆம பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் சாத்தியம் இப்போதைக்கு இல்லை

### அமெ.வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

அமெரிக்காவின் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்குவதற்கு அவ் அமைப்பு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்த களத்தில் போராடுவதற்குச் சிறுவர்களைச் சேர்க்கும் நடைமுறைகளைக் கைவிட வேண்டும்.

இதனைச் செய்வதற்குப் புலிகள் முன்வந்தால் மட்டுமே விடுதலைப் புலிகள் அமைப்பு மீது பொறிக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகள் என்ற முத்திரை நீக்கப்படும். புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் ஆரம்பமாகுமென நாம் எதிர்பார்க்கவில்லை.

அரசாங்கத்திற்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் முன்னோக்கிச் செல்லும் ஆர்வம்

(12ஆம் பக்கம் பார்க்க)

**அன்பு மாணவர்களே!**

உள்ளே!

க.பொ.த(சா)தரப் பரீட்சை மாதிரி வினாத்தாள் சமூகக்கல்வியும் வரலாறும்

ஆக்கம்:
ஆசிரிய ஆலோசகர்
யோ.அ.தவநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# புலனாய்வுப் பிரிவு அதிகாரியின் கைத்துப்பாக்கி மாயம்

புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரது கைத்துப்பாக்கி ஒன்று காணாமல் போயிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான ஏ.ஏ.விக்கிரம நாயக்க என்பவரின் ஒன்பது மில்லி மீற்றர் ரகத்தைச் சேரந்த கைத்துப்பாக்கியே காணாமல் போயுள்ளதாக தெரியவருகிறது. இப்புலனாய்வுத்துறை அதிகாரி கூட்டம் ஒன்றில் கலந்துவிட்டு அலுவலகம் நோக்கித் திரும்பும் போது, அவரது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி காணாமல் போயிருப்பதை அவர் அவதானித்ததாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட புலனாய்வு அதிகாரி வழங்கிய தகவல்களின் அடிப்படையில், பலரிடம் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள குருந்துவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எதுவிதத் தகவல்களும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (உ)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைமை அதிகாரிக்கு நீதிமன்றம் பிடியாணை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்கவின் ஆதரவாளர்களைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைமை அதிகாரி திலக்கருணாரட்ணவை கைது செய்யுமாறு உயர்நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான எஸ்.பி.திசாநாயக்கவின் ஆதரவாளர்கள் பலர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் மிரட்டப்பட்டு துன்புறுத்தப்பட்டதோடு, அவர்களுக்குச் சொந்தமான பல வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சுமார் 13 பேர் மீது உயர் நீதிமன்றில் வழக்குப் பதிவாகியிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளில் உயர்நீதிமன்றத்தின் அழைப்பாணையினை திலக் கருணாரட்ண மதிக்காமல் மீறியும் வந்ததாலேயே அவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## சிறுவிளம்பரம்

### திருமணசேவை

O/L ... மேற்படிப்புப் படித்த ..., மணமகன் தேவை. ... ஜாதகக்குறிப்பு, போட்டோ என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு :- உங்கள் எதிர்காலப் பலன்களை அறிந்திடவும் திருமணப் பொருத்தம் பார்த்திடவும, எண்ஜோதிடம், ஜெனன ஜாதகம கணித்திடவும் இன்றே விரையுங்கள். விலாசம் : நாகலிங்கம் கநதையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. T.P. No- 071 2373401 (8602)

# இலங்கைப் பணிப்பெண் இந்தியரால் கண்டதுண்டமாக வெட்டிக்கொலை

## ஷார்ஜாவில் சம்பவம்

(கொழும்பு)

இலங்கைப் பெண் ஒருவர் ஷார்ஜாவில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த 30 வயது நபர் ஒருவர் அந்தப் பெண்ணைக் கொன்று சடலத்தைத் துண்டு துண்டாக வெட்டி பிளாஸ்டிக் பையில அடைத்து அப்பையைக் குப்பைத் தொட்டியில் எறிந்துள்ளதாகவும் ஷார்ஜாவிலுள்ள நசீரியாவில் சடலத்துடன்கிடந்த அப்பொதியை நகரச்சுத்திகரிப்பாளர்கள் கண்டெடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மரணமான பெண் பல ஆண்டுகளாகப் பணிப்பெண்ணாக வேலை புரிந்து வந்தார் என்றும் குறிப்பிட்ட இளைஞர் கடந்த ஒரு வருட காலமாக அப்பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்தார் என்றும் டுபாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட நபர், இஸ்லாத்தை அப்பெண் அவமரியாதை செலுத்தியமையாலேயே தான் அவளைக் கொன்றதாகத் தெரிவித்துள்ளார். (உ)

# மாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பாளர்களாக 11, 200 பேர் பணியாற்றுவர்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் விரைவில் இடம்பெற இருப்பதால் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மீண்டும் ஒரு தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

இதில் பவ்ரல் அமைப்பிலிருந்த 11ஆயிரத்து 200 பயிற்றப்பட்ட கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். 234 வாகனங்கள் நாள் ஒன்றிற்கு 3 ஆயிரத்து 500 ரூபா வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளன.

பவ்ரல் அமைப்பின் அவதானிப்பாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு 150 ரூபாவும் மாவட்ட அமைப்பாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. இதன்படி பவ்ரல் அமைப்பிற்கு நடைபெறவுள்ள தேர்தலில் வெளிநாட்டு நிதி தேவைப்படாது என அதன் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ தெரிவித்தார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஒவ்வொரு வாக்களிப்பு மாவட்டங்களுக்கும் 2 அவதானிப்பாளர்களை வழங்குமென அதன் அமைப்பாளர்களில் ஒருவரான சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தேவைப்படின் வெளிநாட்டு உதவிகளையும் பெறுவோம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

# இருகுளங்கள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்ட கமநல சேவை திணைக்களத்தின் அனுசரணையுடன் நியாப் திட்டத்தின் கீழ் வடமராட்சியில் இரு குளங்கள் ஆழமாகக் கட்டப்பட்டு புனரமைக் கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச பிரிவில் உள்ள வல்லிபுரம் கவுடுவிராய்க்குளமும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கப்பு தூகநடுங்கிராய்க் குளமுமே ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட குளங்களாகும். (உ-52)

# பொங்கல் உற்சவம்

(துன்னாலை)

புலோலி வடமேற்கு வில்லி பதி முருகன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-150)

# திருப்பலி

(சில்லாலை)

விளான் புனித யுவானியார் ஆலயத் திருநாள் திருப்பலி இன்று காலை 8.00மணிக்கு இடம் பெறவுள்ளது.

திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து திருச்செபப் பவனியும் இடம்பெறவுள்ளது. (உ-58)

# இணைந்த சேவையிலுள்ளோர் இடமாற்ற விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

இணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கென 2005 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்த விருக்கும் இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்கள் ஒவ்வொரு பிரதேச செயலர்களுக்கும் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுகள் பூர்த்தியான இணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலகர்களுக்கான கட்டாய இடமாற்ற விண்ணப்ப படிவமும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்படி விடயம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கொழும்பு பொது நிர்வாக உள்நாட்டு அலுவலக அமைச்சின் செயலாளர் மன்னம்பெரும தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிவசுவாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.(உ-19)

# எதிர்க்கட்சி வரிசையில் 114 பாராளுமன்ற உறுப்பினர் சபாநாயகரிடம் மகஜர் கையளிப்பு

(கொழும்பு)

தற்போதைய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்குப் பெரும்பான்மைப்பலம் இருப்பதை நிரூபிக்கும் வகையில் 114 உறுப்பினர்கள் ஒப்பமிட்ட மகஜர் ஒன்றை பாராளுமன்ற சபாநாயகரிடம் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி அமைப்பு கடந்த திங்கட்கிழமை சமர்ப்பித்தள்ளது.

சிறுபான்மைப் பலத்தைக் கொண்ட பாராளுமன்றம் கூடிய சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு பாராளுமன்றத்தில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் கோரப்பட்டுள்ளது.

114 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் இப்போது ஒப்பமிட்டு இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து இரண்டு தேசியப் பட்டியல் எம்.பிக்களாக நியமிக்கப்பட்ட பின் இத்தொகை 116 ஆக அதிகரிக்கும் என இந்த இரண்டு எம்.பிக்களும் அடுத்த மாதம் நியமனம் செய்யப்படுவார்கள் என்றும எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)



பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிறுவனங்களின் சேவைப் பகுதியால் அன்மையில் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடாத்தப்பட்ட யாழ்.முஸ்லிம் மக்களுடனான இனிய சந்திப்பு நிகழ்வின் போது முஸ்லிம் மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம் :- தாஸ்)

# ஆங்கில தினப் போட்டி மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியோர்

(பருத்தித்துறை)

கல்வித் திணைக்களம் யாழ். மாவட்ட ரீதியில் நடாத்திய ஆங்கில தினப் போட்டியில் வெற்றியீட்டிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளின் விபரம்:-

தரம் :- 13

பார்த்தெழுதுதல் - கே.ஜாளினி (1ஆம் இடம்)

தரம் :- 11

பார்த்தெழுதுதல் - ஏ.அன்ரனி ஜசிந்தா (1ஆம் இடம்)

தரம் :- 6

பார்த்தெழுதுதல் - ரீ.மைதிலி - (2ஆம் இடம்)

தரம் :- 9

சொல்வதெழுதல் - எஸ்.கார்த்திகா ( 2ஆம் இடம்)

தரம் :- 9

ஆக்க எழுத்துப் போட்டி - எஸ்.கார்த்திகா (3ஆம் இடம்).(உ-52)

உலக சுற்றுச் சூழல் தினம் ஜுன் -05



World Environment Day- June-05

## எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

இறைச்சிக்காகவும், சூப்செய்வதற்காக செட்டைகளுக்காகவும் 100 மில்லியன் எண்ணிக்கையான சுறாக்கள் ஒவ்வொரு ஆண்டும் வேட்டை யாடப்படுகின்றன. செட்டைகளை வெட்டியெடுத்த பின்னர் சுறாக்களை உயிருடன் கடலில் வீசிவிட அவை நீந்த முடியாமல் அமிழ்ந்தும், இரத்தப் பெருக்கினாலும் பலியாகி வருகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஜயகாந்த் ரசிகர்கள். பா.ம.க. தொண்டர்கள் கடும் மோதல்

# கொடும்பாவி எரிப்பு; 60 பேர் கைது

(கடலூர்)

தமிழ் நாட்டில் பிரதான கட்சிகளில் ஒன்றான பாட்டாளி மக்கள கட்சித்தொண்டர்களுக்கும் திரைபட நடிகர் விஜயகாந்த்தின் ரசிகா களுக்கும் இடையே பதற்றம் அதிகமாகி ஓரிரு இடங்களில் மோதல்களும் வெடித்ததாக செய் திகள் தெரிவிக்கின்றன.

ரஜனி ரசிகர் மன்றத்துடன் மோதி வந்த பாட்டாளி மக்கள் கட்சி மற்றுமொரு புகழ்பெற்ற திரைப்பட நடிகரான விஜகாந்த்துக்கு எதிராகக் கணைகளைத் தொடுக்கத் தொடங்கியிருக்கிறது.விஜயகாந்த் ரசிகர் மன்றத்தினருக்கும் பா.ம.க. தொண்டர் களுக்குமிடையே மோதல்கள் அதிகரித்து வருகின்றன.

கடலூரில் நேற்று முன்தினம விஜயகாந்த் ரசிகர் மன்றக் கட்டடத்துக்குத் தீ வைக்கப்பட்டது. இது குறித்து கண்டனச் சுவரொட்டிகளை ஒட்டியபோது விஜயகாந்த ரசிகர்களுக்கும், பா.ம.க.ஆதரவாளர்களுமிடையே மோதல்கள் ஏற்பட்டன.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் நடிகர்களையும், திரைப்படங்களையும், சமுதாயக் கேடுகளாக வர்ணித்து கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பேசிவந்திருக்கிறார்.

நடிகர்களின் ரசிக மன்றங்களில் தமது கட்சியினர் சேரக் கூடாது என்றும் தடைவிதித்திருக்கிறார்.

நடிகர் ரஜனிகாந்த்தைக் குறிப்பாகத் தாக்கிப் பேசியதோடு அவருடைய படமான பாபா வெளிவந்த போது பா.ம.க.வினர் அந்தப் படம் திரையிடப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடாத்தினார்கள். படம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை.

அண்மையில் நடந்த மக்களவைத் தேர்தலின் போது ரஜனிகாந்த் ஆணையின் பேரில் ரஜனி ரசிகர்கள் பா.ம.க.போட்டியிட்ட 6 தொகுதிகளிலும் அந்தக் கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்கள்.

1996 ஆம் ஆண்டு முதலே அரசியலில் குதிக்கப் போகிறார் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்த ரஜனிகாந்த் இப்போது அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டார் போலத் தோன்றும் நிலையில், நடிகர் விஜயகாந்த் அரசியல் ஈடுபடக் கூடும் என்ற ஊகங்கள் பலப்பட்டு வருகின்றன.

சில நாட்களுக்கு முன்னர் விழாவொன்றில் பேசும் பொழுது நடிகர் விஜகாந்த், தேர்தலில் நின்று வெற்றிபெறாமலேயே சிலர் அமைச்சராவதற்குக் கண்டனம் தெரிவித்துப் பேசினார்.

டாக்டர் ராமதாஸின் மகன் அன்புமணி தேர்தலில் நின்று வெற்றி பெறாமல் மத்திய அமைசசராகியுள்ளார். குறிப்பிட்ட சில அமைச்சுக்களுக்காகச் சில கட்சிகள் பிடிவாதமாகப் போராடி அவற்றைப் பெற்றதையும் விஜயகாந்த் தனது பேச்சில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்நாட்டுக் கட்சிகள் மக்கள சேவையைக் கருத்திற்கொண்டு இருந்தால் நீர்ப்பாசனத் துறையைக் கேட்டுப் பெற்றிருக்க வேண்டும; காவிரி தண்ணீரில் தமிழகத்துக்கு உரியபங்கைப் பெற்றுத்தந்திருக்க வேண்டும் என்றும் அவர் பேசியிருந்தார்.

டாக்டர் ராமதாஸ் அவரை அரைவேககாடு என்று சாடியதால் கடந்த இரண்டு நாட்களாக விஜயகாந்த் ரசிகர்கள் ராமதாஸின் உருவப் பொம்மையை எரித்துப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் விஜயகாந்த் ரசிகர் மன்றம் கடலூரில் தீக்கிரையானது. இப்பொழுது பா.ம.க. தொண்டர்கள் விஜயகாந்தின் உருவப் பொம்மையையும் விஜயகாந்த் ரசிகர்கள் ராமதாஸின் உருவப் பொம்மையையும் மாறிமாறி எரிக்கும் போராட்டம் நடத்திவருகிறார்கள்.

காவல்துறை முன் எச்சரிக்கை நடவடிக்கையாக சுமார் 60 பேரை இதுவரை கைது செய்திருக்கிறது.

தமிழக அரசியலில் நடிகர்கள் பிரவேசிப்பது, அதில் எம்ஜி.ஆர். ஜெயலலிதா போன்றவர்கள் வெற்றிகரமாக முன்வந்து இருப்பதும் மற்ற நடிகர்களிடையே அபபடிப்பட்ட ஆர்வத்தை வளர்ந்திருப்பது இயற்கையே என்று கூறும் நோக்கர்கள் விஜயகாந்த் அணமைக்காலமாக தனது ரசிகர் மன்றங்களுக்குத் தனியாகக் கொடி வைத்திருப்பதையும் அரசியலில் ஈடுபடும் ஆவல் இருப்பதை மறைககாமல் பேசுவதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். (து)




# இந்தியச் செய்திகள்

## பணிநீக்கம் செய்யப்பட் டோருக்கு அரசியல் தலைவர்கள் அனுதாபம்

(சென்னை)

தற்காலிக அரசு ஊழியர்கள் 16 ஆயிரம் பேரைத் தமிழக அரசு பணி நீக்கம் செய்ததைத் தி.மு.க. தலைவர் கருணாநிதி குறை கூறி யிருக்கிறார்.

குறைந்த ஊதியத்துக்கு ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டிய இவர்களை மீண்டும் பதவியிலமர்த்துமாறு தமிழக அரசை வலியுறுத்தியிருக்கிறார்.

இதே கருத்தை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜீ.கே.வாசனும் வலியுறுத்தியிருக் கிறார்.

நேற்று முன்தினம் சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையில் பணிநீக்கம் செய்யப்பட்ட தற்காலிக ஊழியர்களை மாற்று அடிப்படையில் பணியில் அமர்த்துமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். (து)


## சென்னைக்கு வீராணம் தண்ணீர்

(சென்னை)

சென்னை நகருக்கு வீராண ஏரித் தண்ணீரை விநியோகிக்கும் பணிகள் அடுத்த மாதம் இறுதி வாரத்தில் ஆரம்பமாகுமென்று சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தின் வீராணம திட்டத்துக்கான தலைமைப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஊடக மொன்றுக்கு அவரளித்த பேட்டியில், தற்போது கடலூர், நெய்வேலிப் பகுதிகளில் ஆழ்துளைக்கிணறுகளிலருந்து நாளொன்றுக்கு 3 கோடி லீற்றர் தண்ணீர் லாரிகள் மூலம் சென்னை நகருக்கு விநியோகிக்கப்படுவதாகக் கூறினார்.

வீராணம் ஏரித்தண்ணீர் விநியோகம் தொடங்கும்போது சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 6 கோடி லீட்டராக அதிகரிக்கப்படுமென்றார். (து)



கர்நாடகத்தில் தொடர்ந்து பெய்து வரும் பருவ மழையின் காரணமாக அம் மாநிலத்தில் ஹாசம் மாவட்டத்தில் உள்ள பென்னூர் எனும் இடத்தில உள்ள பாலம், யாகாச்சி ஏரி முழு அளவிற்கு நிரம் பியதை அடுத்து மூழ்கிப் போனது.

# பல்லாயிரக்கணக்கான தற்காலிக ஊழியர்கள் பணிநீக்கம்

## தமிழக அரசின் திடீர் முடிவால் குழப்பம்

(சென்னை)

கடந்த ஆண்டு தமிழ்நாட்டு அரசு ஊழியர்கள் கால



வரையற்ற வேலை நிறுத்தம் நடாத்திய போது 15 ஆயிரத்து 500பேர் தற் காலிக அடிப்படையில் பணியில் சேர்க்கப்பட்டனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் 1006 பேரும், மாவட்டங்களில் தலா 500 பேர் வீதம் 14,500 பேரும் நியமிக்கப்பட்டனர்.

மக்களவைத் தேர்தலின் பின் பணிநீக்கம் செய்யப்பட்ட அரச ஊழியர்களை மீண்டும் பணியில் சேர்ப்பதென ஜெயலலிதா அரசு தீர்மானித்ததைத் தொடர்ந்து இத் தற்காலிக ஊழியர்களை கடந்த திங்கட்கிழமை பணிநீக்கம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனால் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் அதிர்ச்சியடைந்த நிலையில் சென்னை தலைமைச் செயலக வளாகத்திலுள்ள இராணுவ அணி வகுப்புத்திடலில் கூடி ஆலோசனை நடாத்தினர்.

கருணை அடிப்படையில் தங்களை மீண்டும் பணியில் அமர்த்த முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரும் மனுவை முதல்வரின் தனிப் பிரிவுத் தலைமைச் செயலரிடம் கையளித்தனர்.

20 ஆண்டுகளாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருந்தோம். இந்த வேலை கிடைத்த போது மிகவும் மகிழச்சியடைந்தோம். தற்போது எங்களை இந்த வேலையிலிருந்து நீக்கியிருப்பது பார்வையற்றவருக்குப் பார்வையைக கொடுத்துவிட்டு மீண்டும் பறித்துக கொண்டதைப்போல் உள்ளது. எனப் பணிநீககம் செய்யப்பட்ட தற்காலிக ஊழியர்கள் தெரிவித்தனர்.

தனியார் நிறுவனங்களில் 2500, 3000 ரூபா சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தோம். அரசு வேலை தந்ததால் இருந்த வேலையையும் விடடுவிட்டோம். இருந்த வேலையும போய் வந்த வேலையும் போய் விட்டது. இனி எங்கள் எதிர்காலம் என்னவாகும் என அங்கலாய்க்கும் அவர்கள், அரசில் ஒரு இலட்சத்துககு மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் அக்காலி இடங்களை நிரப்ப அரசு எங்களைப் பயன்படுத்தும் என நம்பியிருந்தோம். எங்கள் ஆசை நிராசையாகிவிடடது என செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றியதால் கிடைத்த சம்பளத்தைக் கொண்டுதான் எங்கள் குடும்பங்களைப் பராமரித்து வந்தோம். குழந்தைகளை படிக்க வைத்து வருகின்றோம். நோயாளர்களாகவுள்ள தாய், தந்தையருக்கு சிகிச்சை அழித்து வருகின்றோம். இனி என்ன செய்யப்போகின்றோம் எனத் தெரியவில்லை என அநேகர் செய்தியாளர்களிடம் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர்.அரசின் இந்த திடீர் முடிவால் பல்லா யிரக்கணக்கான தற்காலிகப் பணியாளரின் எதிர்காலம் கேள்விக் குறியாகவேயுள்ளது. (து)

## உத்தரப் பிரதேச மாநிலங்கள் அவைத் தேர்தல் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் மீதான விசாரணை

உத்தரப் பிரதேசத்தில் மாநிலங்கள் அவைகள் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மறுபரிசீலனை செய்து இறுதி முடிவு எடுக்குமாறு தேர்தல் அதிகாரியைத் தலைமைத் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

காங்கிரஸ் வேட்பாளர்கள ஹரீந்திர அகர்வால், எம்.எம். சுக்லா ஆகியோர் தமது வேட்பு மனுக்கள் அரசியல் சட்டத்துக்கு விரோதமாகத் தேர்தல் அதிகாரியால் நிராகரிக்கப்பட்டதாக தேர்தல ஆணையத்திடம் புகார் செய்ததையடுத்து, அதனை விசாரித்த மூன்று உறுப்பினர்களைக்கொண்ட தேர்தல ஆணையம் இவ்வாறு உத்தரவிட்டது.

சம்பந்தப்பட்ட விபரங்களைத் தீர்க்கமாகப் பரிசீலித்து இறுதி முடிவெடுக்குமாறு தேர்தல் அதிகாரியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டாலும் அரசைக் கவிழ்ப்பது நடவாத காரியம்

## விமல் வீரவன்ச வீராப்பு

எதிர்க் கட்சிகளால் ஒரு போதும ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை பதவி கவிழ்க்க முடியாதென ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலா விமல் வீரவன்ச ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில்,

எதிர்க் கட்சிகளுக்கு இடையில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. இத்தகையதொரு நிலையில் அரசுக்கு எதிராக 114 எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பின்ர்கள் கையெழுத்திட்டுள்ளமையை ஆதாரமாகக் கொண்டு எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பாகச் செயற்படப் போகின்றன எனக் கூறமுடியாது.

முழுமையான பங்களிப்புடனும், பலமான அடித்தளத்துடனும பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்பதற்காகவே தமிழீழ விடுதலைப புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடாபில் தமது அரசாங்கம் காலம் தாமதித்து வருகிறது.

இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றி பெறும், இது எமது முன்னணிக்கு இரண்டாவது மக்கள் ஆணையாக அமையும என நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, அரசியலமைப்பை மாற்றுவது தொடாபில் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்துச் செயற்படும் எண்ணம் எமது அரசாங்கத்துக்கு இல்லையென இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அமைச்சரவைப் பேச்சாளா மங்கள சமரவீர தெரிவிததுளளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## கட்சி அலுவலகங்களை பரவலாகத் திறந்து பணிபுரிக

### கூட்டமைப்பிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதான தொகுதிகளில் தமது அலுவலங்களை அமைத்து மக்களின் குறைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என குடாநாட்டு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நகரத்தின் சில பகுதிகளில் மாத்திரம்அலுவலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் பருத்தித்துறைபகுதியில்இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவ லகங்கள் அமைக்கப் படவில்லை.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வசதிகளை மட்டும் பாராது மக்களின் குறை களை அறிந்து அவற்றைத் தீர்க்க முன்வர வேண்டும் எனவும் அவர்கள் மேலும் கோரியுள்ளார். (உ-43)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.30மணிக்கு ஞானச்சுடர் ஆனி மாத இதழ் வெளியிடப்படவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை டாக்டர் கதிரவேற்பிள்ளையும், மதிப்பீட்டுரையை பரு.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீ.தி.சோமஸ்கந்தராஜாக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். (உ-10)

## நூலக ஊழியர்களுக்கு விசேட சேவைப் பயிற்சி

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு உப அலுவலக நூலகங்களில் கடமை புரியும் நூலகர்கள், நூலகசேவையாளாகள், நூலகத்தொழிலாளர்கள மற்றும் பதில் கடமைபுரியும் நூலக ஊழியர்களிற்கு நூலக சேவை தொடர்பான விசேட பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிககு மானிப்பாய் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாநகர சபையின் சிரேஷ்ட நூலகர் மறறும் நூலக சேவை அதிகாரிகள் இப்பயிற்சிக் கருத்தரங்கில் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ-252)

## புனர்வாழ்வுப் பகுதி குறித்து காரை ப.நோ.கூ.ச. ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

காரை நகர் பல[illegible] கூட்டுறவுச் சங்கம், புனா[illegible]ப பகுதியால் ஒரு கோடியே ஒரு இலட்சத்து 8ஆயிரத்து 789ரூபா 44சதம் தமக்கு பெருமதியாக உள்ளமையை ஜனாதி சந்திரிகா குமாரதுங்கவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதுடன்,

இது சம்பந்தமான கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

இடமபெயாந்த மக்களின் நலனை கருத்தில் கொண்டு புனர்வாழ்வுப் பகுதி மிகுதிப் பொருட்களை வழங்கும் என்ற நோககில் மேறபடி பணப் பெறுமதியான உணவுப் பொருடகளை மககளுக்கு விநியோகித்துள்ளோம்.

1991-1996ஆண்டு காலப்பகுதியில் பல இலட்சம் பெறுமதியான சொத்துக்களை இழந்தும் அவற்றிற்கான இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படாத நிலையில் சங்கத்திற்கு பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

புனாவாழ்வு பகுதி வருமதியைத்தர மறுத்துவிட்டமை தொடர்பில்1999ஆம ஆண்டு சங்கம் தொடர்புடைய திணைக்கழங்கள் மற்றும் அமைப்புககளின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தும் இன்றுவரை இப் பிரச்சினை தாக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## பஸ் மோதி பாடசாலை மாணவிகள் மரணம்

கொழும்பு குருநாகல் நெடுஞ்சாலையின் பொல்காவலையில் உள்ள ரத்மகொட பாடசாலைக்கு அருகே இடம் பெறற வீதி விபத்தில் 2மாணவிகள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் இறந்த மாணவிகள் இருவரும குரு நாகல் நகரில்உள்ள பிரதான பாடசாலைகுச் செல்வதற்காக வீதியில் நின்று கொண்டிருந்த போது பஸ் ஒன்று இவாகள் மீது மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-61,10)

## மக்கள் வங்கியின் விசேட கருமபீடம் பண்டத்தரிப்பில் ஆரம்பம்

(சங்கானை)

மக்கள் வங்கி சங்கானைக் கிளையின் விசேட கரும பீடமும் (நடமாடும சேவை) மக்கள் துரித கடன் சேவையும்பண்டத்தரிப்பில் கடந்த திங்கட்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம பித்து வைக்கப்பட்டது.

மக்கள் வங்கி சங்கானைக் கிளையின் முகாமையாளர் பி.அச்சுதம் பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் பி.பத் திரணவும் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி வட வலய விசேட நிறைவேற்று அதிகாரி இளம்பிறை நாதன், சங்கானை பிரதேச செயலாளர் மோகன்றாஸ், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.சிவபாத விருதயர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினராக பண்டத தரிப்பு வர்த்தக சங்கப் பிரதிநிதி சி.சுப்பிரமணியம், உடுவில் கோட்டக் கல்வி அதிகாரி எஸ் செல்லையா, மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் கே.ஆனந்த ராஜா ஆகியோர் பங்கேற்றனர். (உ-34)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை

## மிதிவெடியினால் பாதிப்புற்றோர்கள் பற்றிய தகவல்கள் (யாழ்.மாவட்டம்)




☆ யாழ்.குடாநாட்டில் மிதிவெடியினால் பாதிக்கப்பட்டோர் 664 பேர்

☆ பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் 20 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்ட ஆண்கள்

☆ பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் கூலித் தொழிலாளர்கள்.

☆ பாதிக்கப்பட்டோர் அதிகமுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் கோப்பாய், தென்மராட்சி, தெல்லிப்பழை, நல்லூர்.

# District Mine Action Office, Jaffna.

மாவட்ட மிதிவெடி [illegible] அலுவலகம், [illegible]ணம்.

(C/269)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர (சாதாரண) மாதிரிப் பரீட்சை - 2004


## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**சமூகக்கல்வியும் வரலாறும் I**

**மணி - 1**

ஆக்கம் :
*யோ. அ. தவநாயகம்*
ஆசிரிய ஆலோசகர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

❖ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
❖ தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
♦ 1-5 வரையுள்ள வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தேசப் படத்தைப் பயன்படுத்தி விடையளிக்குக.




(1)ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைமையகம் அமைந்துள்ள நகரத்தைக் குறித்துக்காட்டும் எழுத்து எது?
1. R 2. P 3. Q 4. S


(2) M எழுத்தால் குறித்துக் காட் டப்படும் கால்வாய் பின்வருவன வற்றுள் எது?
1. சுயெஸ் கால்வாய் 2. ஆங்கிலக் கால்வாய 3. பனாமாக் கால்வாய் 4. கீல் கால்வாய்

(3)அண்மையில் வெள்ளப் பெருக்கி னால் பேரழிவுக்குள்ளான ஹெயிட்டி யைக் குறிக்கும் எழுத்து.
1. G 2. H 3. Z 4.C

(4) மெக்ஸிக்கோ, மட்ரிச் ஆகிய இரண்டு நகரங்களைக் குறித்துக் காட்டும் எழுத்துச்சோடி எது?
1. AB 2. AE 3. BC 4. AD

(5) K எழுத்தினால் குறித்துக் காட் டப்பட்டுள்ள தீவு?
1. கியூபா 2. ஜமேக்கா
3. ஐஸ்லாந்து 4. போக்லன்ட்

♦ 6-10 வரையுள்ள வினாக்களுக்கு கீழே உள்ள இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி விடையளிக்குக.




(6) A எழுத்தினால் காட்டப்பட்டு ள்ள பிரபல்யமாகிவரும் வடபகுதி நகரம்?
1. வவுனியா 2. கிளிநொச்சி
3. ஆனையிறவு 4. ஓமந்தை

(7) விக்டோரியா நீர்த்தேக்கத்தைக் குறித்துக்காட்டும் எழுத்து எது?
1. L 2. D 3. E 4. G

(8) தொண்டைமானாறு கடல் நீரேரி யைக் குறித்துக்காட்டும் எழுத்து?
1. K 2. D 3. R 4. J

(9) X எழுத்தால் காட்டப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்
1. பியகம 2. கொக்கல
3. வெலிகம 4. கட்டுநாயக்க

(10)Yஎழுத்தால் காட்டப்பட்டுள்ள நிழற்றப்பட்ட பகுதிக்குரிய இயற் கைத் தாவரம் யாது?
1. புல்லினங்கள் 2. அயனக் காடுகள்
3. முட்புதர் காடுகள்
4. என்றும் பசுமையான காடுகள்.

(11) மாதுறு ஓயா பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன கலிங்கத்தொட்டிச் சிதைவுகள் புலப்படுத்துவது யாதெனில்
1. இப்பிரதேசம் குளம் ஒன்றை அமைப்பதற்குப் பொருத்தமானது என்பதை
2. புராதன நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு உயர்தொழில் நுட்பம் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதை
3. இப்பிரதேசத்தில் பாயும் நீரின் வேகம் மிக மிக அதிகமானது என்பதை
4. இப்பிரதேசம் குளம் அமைப்பதற்குப் பொருத்தமானதல்ல என்பதை

(12) கண்டிய இராசதானி காலத்தில் அரச சபையில் பணியாற்றிய அதிகாரம், திசாவை போன்றவர்கள் ஆற்றிய பணிக்காக அரசனால் வழங்கப் பட்ட காணிகள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. நிந்தகம் 2. மானிய நிலங்கள் 3. விகாரைக் காணிகள் 4. கபாடகம்

(13) மலையக சுதேசிய கைத்தொழில் வளர்ச்சி தொடர்பாகக் குறிப்பிட்டுள்ள பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்றது எது?
1. உருக்குக் கைத்தொழில், தும்புறு மிட்டடியாவத்தை என்னும் இடத்தில் பிரசித்தி பெற்றிருந்தது
2. சிற்ப வேலைப்பாடுகளுடைய மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டது
3. பருத்தி நெய்தல், துணி அலங்காரம் செய்தல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது
4. பித்தளை, செருக்கற் பொருட்கள் பலவும் உற்பத்தி செய்யப்பட்டன

(14) இலங்கைப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் சட்டமூலம் ஒன்று அரசியல் யாப்புக்கு இயைபுடையதாகவுள்ளதா என்பது தொடர்பான பிரச்சினை எழும்போது அது தொடர்பான முடிவினை மேற்கொள்ளும் அதிகாரம்?
1. ஜனாதிபதிக்கு உரித்தானது 2. சபாநாயகருக்கு உரித்தானது.
3. பிரதம மந்திரிக்கு உரித்தானது.4. உயர் நீதிமன்றத்திற்கு உரித்தானது.

(15) A- தரிசு நிலச்சட்டத்தின் மூலம் நிலங்களை அரசு கையேற்றமை.
B- இரட்டை ஆட்சி நிலவியமை C- வெல்லசக் கிளர்ச்சி ஆகியன பிரித் தானியர் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஆகும். இவற்றை கால ஒழுங்கில் வரிசைப்படுத்தினால் சரியான ஒழுங்கு எதுவாகும்?
1. BAC 2. ACB 3. CBA 4. BCA

(16) மலையக இராசதானியில் சிறந்து விளங்கிய சித்திரக் கலை தொடர் பாகக் குறிப்பிடக்கூடிய பொருத்தமான கூற்றுக்கள் பின்வருவனவற்றுள் எவை?
A- யாதகக் கதைகளையும், புத்தரின் வாழ்க்கையையும் வரைவது பிரபல்யமாக இருந்தது.
B- மலையக சித்திரக் கலை புராதன சித்திரக் கலை மரபில் இருந்து எந்த வகையிலும் வேறுபட்டதாக இருக்கவில்லை. C- கங்காராமை, தலதாமாளிகை, ரிதி விகாரை ஆகியவற்றில் மலையக சித்திரக்கலை அம்சங்களை அவதானிக்கலாம்.
D- ஓவியங்கள் சுவர்களிலும் பனை யோலைச் சுவடிகளிலும் வரையப்பட்டிருந்தது.
E- சிகிரியா ஓவியக் கலையின் செல்வாக்கினை தலதாமாளிகைச் சித்திரங்களில் அவதானிக்கலாம்.
1. ACD 2. BCE 3. ABE 4. BDE

(17) சர்வதேச வியாபாரத்தோடு தொடர்புடைய் சர்வதேச ஸ்தாபனங்களைக் கொண்ட தொகுதி பின்வருவனவற்றுள் எது?
1. ஆசியான், உலக வங்கி, ஐரோப்பிய பொதுச் சந்தை.
2. பொதுநலவாயம், உங்ராட், கொழும்புத் திட்டம்
3. சர்வதேச வர்த்தக சங்கம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி.
4. உங்ராட், ஐரோப்பிய பொதுச்சந்தை, சர்வதேச வர்த்தக சங்கம்.

(18) A - பிறப்பின் போது எதிர்பார்க்கும் ஆயுட்காலம் B - சிசு மரண வீதம், C- கொள்வனவு சக்தி, D- ஒரு வைத்தியருக்கான மக்கள் எண்ணிக்கை E- எழுத்து வாசிப்புத் திறன்
மேலே தரப்பட்ட அபிவிருத்தி சார்ந்த அளவீட்டுப் பிரமாணங்களில் மனித அபிவிருத்திச் சுட்டியை கணிப்பீடு செய்வதற்கு பயன்படும் பிரமாணங்கள்.
1. A யும் D யும் E யும் 2. A யும் C யும் E யும்
3. B யும் D யும் E யும் 4. B யும் C யும் D யும்

(19) ஜனநாயக நாடொன்றில் அரசியல் கட்சிகள் பல இருப்பதால் ஏற்படக் கூடிய முக்கிய பிரதிகூலமானது
1. நிலையான அரசாங்கத்தை உருவாக்க முடியாதிருத்தல்
2. சிறுபான்மை இனத்தவருக்கு குறைந்தளவு கவனம் செலுத்தப்படுதல்
3. கட்சிகளுக்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் காணப்படாதிருத்தல்
4. சிறுபான்மை இனத்தவர் எப்போதும் எதிர்க்கட்சியாக இருத்தல்

(20) "சார்க்" நாடுகளிடையே உருவாக்கப்பட்டுள்ள சப்ரா உடன்படிக்கையின் அடிப்படை நோக்கம்
1. வெளிநாட்டு வியாபாரத்தில் சார்க் நாடுகளினால் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு பாய்ந்து செல்லும் பெருமளவு பணத்தைக் குறைத்துக் கொள்ளல்.
2. சார்க் நாடுகளிடையே குறுகிய கால, நீண்ட கால வியாபார உடன்படிக்கை களை ஏற்படுத்துதல்.
3. சார்க் நாடுகளுக்கு இடையிலான வியாபாரத்தில் உறுப்பு நாடுகளின் தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு சுங்க வரி நிவாரணம் வழங்குதல்.
4. சார்க் நாடுகளுக்கு இடையிலான வியாபாரம் தடைகளின்றிச் சுதந்திரமாக நடைபெற உதவுதல்.

(21) கண்டி இராச்சியம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் ஒன்று பிழையானது அது எது?
1. பொருளாதாரம் போலவே சமூக அமைப்பும் மூல அமைப்பை அடிப்படை யாகக் கொண்டு செயற்பட்டது.
2. பழக்கவழக்கங்களும், சம்பிரதாயங்களும் நாட்டில் சட்டங்கள் போலவே ஏற்றுக்கொள்ளப்பட்டன.
3. வியாபார நடவடிக்கைகள் பணத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தன.
4. உப்பு, கருவாடு போன்ற சில பொருட்கள் பிற பிரதேசங்களில் இருந்து பெறப்பட்டன.

(22) பொதுநலவாய அமைப்பிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த தென்னாசிய நாடொன்றை மீண்டும் அவ்வமைப்பில் இணைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்நாடு எது?
1. இந்தியா 2. நேபாளம் 3. மாலைதீவு 4. பாகிஸ்தான்

(23) இலங்கை அரசியல் யாப்புத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு பெற வேண்டிய பாராளுமன்ற மொத்த உறுப்பினர்களின் ஆகக் குறைந்தளவு வாக்குகளின் எண்ணிக்கை யாது?
1. மூன்றில் ஒன்று 2. இரண்டில் ஒன்று 3. மூன்றில் இரண்டு 4. ஆறில் ஐந்து

(24) நிறைவேற்றதிகாரம் கொண்ட இலங்கை ஜனாதிபதிக்கு உரித்தற்ற பணி பின்வருவனவற்றுள் எது?
1. அமைச்சர்களை நியமனம் செய்தல்
2. பாராளுமன்ற உறுப்பினர்களை நியமனம் செய்தல்
3. அமைச்சரவைக்கு தலைமை வகித்தல்
4. உயர்நீதிமன்ற பிரதிநீதியரசரை நியமனம் செய்தல்

(25) உன்னதமான கலைத்திறனுக்கும், கட்டடக் கலை அமைப்பிற்கும் உதாரணமாக விளங்குவது?
1. சிகிரியாவின் கண்ணாடிச் சுவர்.2. கலிங்கத்தொட்டி
3. றுவான் வெலிசாயவின் யானைச் சுவர். 4. அநுராதபுரம் குட்டம் பொக்கை

(26) பின்வருவனவற்றுள் இலங்கைக்கான ஜனநாக வழியில் முதல் அடி எடுத்து வைப்பதைக் குறிப்பதாக அமைந்த கோல்றுக் சீர்திருத்த ஆலோசனை எது?
1. இராசகாரிய முறையை ஒழித்தல்
2. சட்டவாக்கற் கலகம், சட்டநிர்வாகக் கலகம் அமைக்கப்படல்
3. கிராம சபைகளுக்கு இருந்த நீதித்துறை அதிகாரங்களைக் குறைத்து நீதிமன்ற முறையை ஏற்படுத்துதல்.
4. மலை நாட்டையும் தாழ்நிலப் பகுதியையும் ஒன்றாக்கி ஒரு நிர்வாக முறையின் கீழே கொண்டுவருதல்

(27) ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சி வெற்றியடைவதற்கு மிகவும் உன்னதமான காரணி
1. அரசியல் அறிவு படைத்த மக்கள் இருத்தல்
2. ஆள்வீத வருமானம் உயர்மட்டத்தில் இருத்தல்
3. இரண்டு அரசியல் கட்சிகள் மாத்திரம் இருத்தல்
4. சுதந்திரமான ஊடக முறைமை இருத்தல்

(28) இலங்கை போன்ற நாடுகள் தொடர்ந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தல் பொருத்தமற்றது ஏனெனில்
1. எமது நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களை இங்கு உற்பத்தி செய்வதற்குத் தேவையான பின்னணி காணப்படுதல்
2. உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டியிருத்தல்
3. உணவு உற்பத்தி செய்யும் நாடுகள் காலத்திற்குக் காலம் உணவுப் பொருட்களின் விலையை அதிகரித்தல்
4. உணவை இறக்குமதி செய்வதால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பின் தள்ளப்படுதல்

(29) இலங்கையின் பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டி உயர் பெறுமானத்தை வெளிப்படுத்தி நிற்கும் அதேவேளை மனித அபிவிருத்திச் சுட்டியானது மிகத் தாழ்ந்த மட்டமாக இருந்ததில் செல்வாக்குச் செலுத்தும் காரணி பின்வருவனவற்றுள் எது?
1. ஆயுள் எதிர்ப்புத் தாழ் மட்டத்தில் நிலவுதல்
2. சிசு மரண விகிதம் உயர் மட்டத்தில் நிலவுதல்
3. ஆள் வீத வருமானம் உயர் மட்டத்தில் நிலவுதல்
4. மக்களின் கொள்வனவு சக்தி தாழ் மட்டத்தில் நிலவுதல்

(30) 'கண்ணிவெடி" ஆபத்திலிருந்து பாதுகாப்பினை உயர்ந்த அளவில் பேணுவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளுள் மிகப் பொருத்த மானது எது?
1. வைத்திய வசதிகளையும், பராமரிப்பையும் வழங்கல்
2. பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
3. கண்ணிவெடிகளை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
4. கண்ணிவெடிப் பாவனையைத் தடுத்தல்

(31) இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு உரித் தான நியமனங்களைக் கொண்ட சரியான தொகுதி.
1. பிரதம மந்திரி, சபாநாயகர், மாகாண ஆளுநர்கள்.
2. சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர், மாகாண ஆளுநர்கள்
3. பிரதம மந்திரி, அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள்.
4. மாநகர முதல்வர், பொலிஸ்மா அதிபர், தேர்தல் ஆணையாளர்.

(32) பிரதேச வாரியான பிரதி நிதித்துவ முறையை இலங்கையில் அறிமுகப் படுத்திய ஆசிய அரசியல்யாப்புச் சீர்திருத்தம் எது?
1. கோல்புறுக் 2. மனிங்சீர்திருத்தம் 3. டொனமூர் சீர்திருத்தம் 4. கோல்புறுக் சீர்திருத்தம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோக் கிண்ணம் - 2004

# கால் இறுதியில் நுழையும் தகுதியை சுவீடனும் டென்மார்க்கும் பெற்றன

ஐரோப்பிய கோப்பை காலப்ந்துப் போட்டி போர்த்துக்கலில் நடை



பெற்றுவருகிறது.

இதன குருப் 'சி' பிரிவில் கடைசி 'லீக்' ஆட்டங்கள் நேற்று முன் தினம் நடந்தன. போர்ட்டோ நகரில் நடந்த ஆட்டத்தில் டென்மார்க்-சுவீடன் அணிகள் மோதின.

சுவீடன் அணி தொடக்க ஆட்டத்தில் 5-0என்ற கோல் கணக்கில் பல்கேரியாவை தோறகடித்து இருந்தது. இததாலியுடன் 1-1என்ற கணககில் 'டிரா' செய்து இருந்தது. டென்மார்க் தொடக்க ஆட்டத்தில் கோல் எதுவுமின்றி இத்தாலியுடன் 'டிரா' செய்தது. 2-வது ஆட்டத்தில் பல்கேரியாவை 2-0என்ற கணக்கில் வென்றிருந்தது.

இரு அணிகள் மோதிய ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இந்தப் போட்டி 2-2என்ற கோல் கணக்கில் 'டிரா' ஆனது. டென்மார்க் அணியில் 28மற்றும் 66-வது நிமிடங்களில் தாம்சன் கோல அடித்தார். சுவீடன் அணியில் 47வது நிமிடத்தில் லார்சனும், 89வது நிமிடத்தில் ஜான்சனும் கோல் அடித்தனர்.

குயிமராஸ் நகரில் நடந்த ஆட்டத்தில் இத்தாலி-பல்கேரியா அணிகள் மோதின. இதில் இத்தாலி 2-1என்ற கோல் கணக்கில் வென்றது.இத்தாலி அணியில் பெரோட்டாவும், கேசனோவும் பல்கேரியா அணியில் மார்ட்டின் பெட்ரோவும் கோல் அடித்தன.

'சி' பிரிவில் 'லீக்' முடிவில் சுவீடன், டென்மார்க், இத்தாலி ஆகிய 3அணிகளும் ஒரு வெற்றி 2 டிராவுடன் தலா 5 புள்ளிகள் பெற்றிருந்தன. கோல்கள் அடிப்படையில் சுவீடன், டென்மார்க் அணிகள் முதல இரணடு இடங்களைப் பிடித்துக் காலிறுதிக்குத் தகுதி பெற்றன. சுவீடன் 8 கோலகள் போட்டிருந்தது. 3 கோல்கள வாங்கியிருந்தன. டென்மார்க் 4 கோல் போட்டு 2 கோல் வாங்கியிருந்தது.

'சி' பிரிவில் முதல் இடத்தைப் பிடித்த சுவீடன் காலிறுதியில் 'டி' பிரிவில் 2-வது இடத்தைப் படிக்கும் அணியுடன் மோதும இந்த ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி நடக்கிறது. 'சி' பிரிவில் 2-வது இடத்தைப் பிடித்த டென்மார்க் காலிறுதியில 'டி' பிரிவில் முதல் இடத்தை பிடிக்கும் அணியுடன் 27ஆம் திகதி மோதவுள்ளது.

முன்னாள் சம்பியனான இத்தாலி அணி இந்தப்போட்டியில் இருந்து பரிதாபமாக வெளியேற்றப்பட்டது. அந்த அணி ஒரு வெற்றி 2 டிராவுடன் 5 புள்ளிகள் பெற்றிருந்தும் கோல்கள் அடிப்படையில் வாய்ப்பை இழந்தது. அந்த அணி 3கோலகள் போட்டு, 2 கோல்கள் வாங்கி இருந்தது. 1968ஆம் ஆண்டு நடந்த ஐரோப்பிய கோப்பைப் போட்டியில் இத்தாலி சம்பியன் பட்டம் பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது. (உ)



## இலங்கை வீரர்கள் தாய்லாந்தில்

ஆசிய குரோன் மெய்வல்லுநர் தொடரின் முதறகட்ட ஆட்டங்களில் பங்கேறகும் இலங்கைக்குழு கடந்த திங்களன்று தாய்லாந்து புறப்பட்டுச் சென்றது.

ஆசிய மெய்வல்லுநர் சம்மேளனம் தொடர்ச்சியாக மூன்றாவது ஆணடாகவும் நடாத்தும் இப் போட்டித் தொடரில் இலங்கை சார்பில் முன்னணி வீர, வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர்.

எதென்ஸில் இடம்பெறவிருக்கின்ற ஒலிம்பிக் போட்டிக்கான தகுதியை வழங்கும் போட்டித் தொடராக இது கருதப்படுகிறது.

இப் போட்டித் தொடரின் இரண்டாம் கட்ட ஆட்டங்கள் எதிர்வரும 27ஆம் திகதி கொழும்பிலும் ஜூலை முதலாம் திகதி மூன்றாம் கட்டப் போட்டிகள் பிலிப்பைன்ஸின் தலைநகர் மனிலாவிலும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, ஒலிம்பிக்கில் சாதனை படைக்கும் பொருட்டு தமது தகுதிகளை நிருபிக்கும் வகையில சுசந்திகா ஜெயசிங்க, ஜானி சதுரங்கனி, தமயந்தி தர்ஷா, ரொஹான பிரதீப் குமர, சுகத்திலகரத்ன, சங்க விமலவங்ச, பிரசனின அமரசேகர ரோவதித புஸ்பகுமார, சமிந்த விஜயக்கோன் ஆகியோரே தாய்லாந்து சென்றுள்ளனர்.

இந்தப் போட்டிகளில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். (உ)



விம்பிள்டனில் நடைபெற்ற டெனிஸ் போட்டியில் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த மிலின்டா ஸிங்க்-அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அலிஸியா மொலிக்குக்கும் இடையே, நடைபெற்ற போட்டியில் ஹங்கேரி நாட்டு வீராங்களை பந்தை அடிக்கும் காட்சி.

## பிரான்ஸ் கால்பந்து அணித்தலைவராக ஸினேடின் ஸிடேன்

பிரானஸ் காலப்ந்து அணியின புதிய தலைவராக ஸினேடின ஸிடேனை நியமிப்பதற்கு சக வீரர்களும் பயிற்சியாளர் சான்டினியும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

'டபுள் ஜே' எனச் செல்லமாக அழைக்கபபடும் இவர் 'யூரோ 2004' தொடரில இங்கிலாந்திற் கெதிரான போட்டியில் மார்செல்டி செய்லிக்குப் பதிலாக தலைவராக செயற்பட்டு பிரான்ஸ் அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

35 வயதான இவர் அணியின் வெற்றிக்கான முழுப்பொறுப்பையும் தானே ஏற்றுக்கொள்வதுடன் தலைவருக்குரிய முழுத் தகுதியையும் கொண்டுள்ளார் என பயிற்சியாளர் ஜேக்ஸ் சாண்டினி தெரிவித்தார்.

சிலவஸ்டர், டிரெசிகட் போன்ற வீரர்களின் பெயர்களும் தலைமைப் பதவிக்குப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றபோதும் ஸிடேனிற்கே அதிக தகுதிகள் உள்ளதாகத் தெரியவருகின்றது. (உ)

## அகதிகள் தினத்தை ஒட்டி இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் விளையாட்டுப் போட்டிகள்

(சுண்டுக்குளி)

கடந்த 20ஆம் திகதி உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு யு.என்.எச்சி.ஆர். யாழ்கிளை ஒழுங்கு செயத விளையாட்டுப் போட்டிகளில் சண்டிலிப்பாய், பருத்தித்துறை, சுன்னாகம், தெல்லிப்பழை, சங்கானை, கோப்பாய் ஆகிய இடங்களில் வதியும் இடம்பெயர்ந்த மக்கள் கலந்துகொண்டனா.

அரியாலை காசிப்பிள்ளை விளையாடடரங்கில் காலை 9மணி முதல் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிகளை யு.என்.சி.ஆர். தலைமைக் காரியாலயத்திலிருந்து வருகை தந்த அக்றொம்ட்றாஜ் கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

முதலில் நடைபெற்ற கரப்பந்தாட்டத்தில் பருத்தித்துறை அணி சண்டிலிப்பாய் அணியை இரு நேர் செற்களில் வென்றது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய அணி உடுவில் அணியை 2:1என்ற செற்கணக்கில் வென்று இவ்வருட சம்பியனானது.

2ஆம், 3ஆம் இடங்களுக்கான தெரிவு ஆடடத்தில் பருத்தித்துறை அணி உடுவில் அணியை இரு நேர் செற்களில் வென்றதனால பருத்திததுறை அணி 2ஆம் இடத்தையும், உடுவில் அணி 3ஆம் இடத்தையும் பெற்றன.

இப் போட்டிகளுக்கு நடுவர்களாக எஸ்.அப்புத்துரை, கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம், கே.ஏகாம்பரம் ஆகியோர் கடமையாற்றினர்.

மாலையில் சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப்போட்டிகளும் இடம்பெற்றன. (உ-10)

## அரசியலில் குதிக்கமாட்டேன் முன்னாள் கப்டன் கபில்தேவ்

இந்திய கிரிக்கெற் அணியின் முன்னாள் கபடன் கபில்தேவை கடந்த பொதுத் தேர்தலின்போது தன் பக்கம் இழுக்க பல்வேறு அரசியல் கட்சிகள் முயன்றன. ஆனால் அவர் நழுவிவிட்டார்.

இந்நிலையில் அரசியலில் தான் நுழைய மாட்டேன் என்று கபில் தேவ் திடடவட்டமாகக் கூறியுள்ளார்.

ஷோரும் திறப்பு விழாவில் அவர் இதைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறும் போது, எனக்கு அரசியலில் ஆர்வம் கிடையாது. இதனால் அரசியலில் குதிக்கமாட்டேன் என்றார்.

1983ஆம் ஆண்டு கபிலதேவ் தலைமையில் இந்திய அணி உலகக் கோப்பையைக் கைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மான நட்ட வழக்குத் தொடுத்தார் அக்தர்

20கோடி ரூபாய் கேட்டு மான நஷ்ட வழக்குத தொடர்ந்துள்ளார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புயல் வேக பந்து வீச்சாளர் சொஹிப் அக்தர்.

பொறுப்பற்ற பேச்சு, ஆபாசக் காட்சிகள் ஆகிய நிகழ்ச்சிகளில் சம்பந்தப்படுத்தி அக்தர் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என லாகூர் நீதிமன்றத்தில் அக்தர் மீது சையத்முஜாமல்ஹுசைன்ஷா, சையத நஜாமுல் அப்பாஸ்ஷா ஆகியோர் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

போதிய ஆதாரங்களைக் காட்டத் தவறியமையால் வழக்குத் தள்ளுபடியாக்கப்பட்டது.

அக்தர் தனது பெயரிற்குக் களங்கம் ஏற்படுத்தியமைக்கு 14கோடியும் மன உளைச்சலுக்கு 6 கோடியும் நஷ்டஈடாக வழங்க வேண்டுமென பதில் தாக்கல் செய்துள்ளார்.

இவர் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் முடிவையும் மாற்றியுள்ளார் எனத் தெரியவருகின்றது. (உ)




கடந்த திங்களன்று விம்பிள்டனில் நடைபெற்ற முதற்சுற்றுப் போட்டி மழைகாரணமாக நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏமாற்றத்துடன் நிற்கும் விளையாட்டு ரசிகர்கள்.

# விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெற தர வரிசை இலங்கை 3வது இடம்

ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் அணிகளின் வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெற் கவுன்சில் (ஐசிசி) வெளியிட்டு உள்ளது.

இதில் இந்திய அணி 107 புள்ளிகளுடன் 5வது இடத்தில் உள்ளது.

136 புள்ளிகள் பெற்றுள்ள அவுஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா (113 புள்ளி) 2 வது இடத்திலும, இலங்கை (110புள்ளி) 3வது இடத்திலும், நியூசிலாந்து (109 புள்ளி) 4வது இடத்திலும் பாகிஸ்தான் (106 புள்ளி) 6 வது இடத்திலும்உள்ளன. இங்கிலாந்து அணி (105புள்ளி) 7வது இடத்திலும், மேற்கிந்திய தீவுகள் அணி (102 புள்ளி) 8வது இடத்திலும், சிம்பாப்வே 9வது இடத்திலும் கென்யா 10 வது இடத்திலும், வங்காள தேசம 11வது இடத்திலும் உள்ளன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**ஏழாம் திருவிழா**



### நல்வரந்தருவாய்

*நயினை நடுவே நாகபூசணியே*
*நாடியோர்க்கு நீ நாம சொரூபினியே*
*நாகத் தலைவியே நயப்பான நாயகியே*
*நாமும் சரணடைந்தோம் நல்வரம் தா*

*நாவின் புகழே நாதபல்லவியே*
*நாமகள் நடுவே நற்பெயர் பெற்றவளே*
*நாகர் முதலே நாட்டின் பொருளே*
*நாளுந் துதிக்கின்றோம் நல்வரந் தா*

*நித்திய வடிவே நிந்தனை நீறே*
*நிர்மலப் பொருளே நிவந்த கண்ணே*
*நிழலின் ஒளியே நீல வல் விழியே*
*நின்மதி கேட்கின்றோம் நல்வரந் தா*

**சுகந்தினி முருகேசு**
அச்சுவேலி தெற்கு

### அருட்பார்வை மருந்தாகுமே!

*அலையாழி சூழ்நயினை நிலையாக உறைதேவி*
*அகிலாண்ட புவ னேஸ்வரி*
*கலையாவும் தருகின்ற கருணா கரி*
*கடல் சூழ எமையாளும் பரமேஸ்வரி*
*நலஞ்சூழத் தமிழ் வாழத் த்ருவாய் கதி*
*நாகப்புடை சூழ நலஞ்சேர்க்கும் நாகேஸ்வரி*
*பலஞ்சேரத் தமிழோங்கத் துணையாகுவாய்*
*பணிந்தோர்க்குன் அருட்பார்வை மருந்தாகுமே!*

**கவிஞர் நயினை**
**இராகுலன்**

### இன்பமாய் நிறைவாய் தாயே

*தேவியின் விழியின் நீலம்*
*திரள்கின்ற யோக மெல்லாம்*
*பாவிகள் பாவ வெள்ளம்*
*பனிமழை யென்ன நீங்கும்*
*காவியங் கண்ட தாயே*
*கனிமொழி பேசி யுன்றன்*
*ஓவியக் கண்கள் கொண்டே*
*உடன் எனைக் காப்பாய் நன்றே*

*பொன்வண்டு போன்ற உன்றன்*
*பூ விழி ஊஞ்ச லாட*
*கண்கண்ட தெய்வம் நீயே*
*காப்பதுன் கடனே யன்றோ*
*மின் கண்ட கொடியே கூர்ந்த*
*மீன்விழி பார்த்தே யென்னைத்*
*தின்கின்ற பாவம் போக்கித்*
*திருவினைத் தாராய் தாயே*

*அண்டங்கள் எல்லாம் ஆக்கி*
*அழகுக்கும் வேர்தான் ஆகி*
*நின்சிவன் அன்பின் நெஞ்ச*
*நேயத்தில் நிறைந்த செல்வி*
*உன்றனைப் பாடும் என்றன்*
*உயிருள்ள பாடல் தம்மை*
*என்றெங்கு பாடி னாலும்*
*இன்பமாய் நிறைவாய் தாயே*

**கவிமணிகந்தமுருகேசதாசனார்**

# செய்தித் துளிகள்

## மானிப்பாயில் மகப்பேற்றுமனை அமைக்கக்கோரிக்கை

(சாவகச்சேரி)

மானிப்பாய்ப் பிரதேசத்தில் மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்று மருத்துவமனை என்பன அமைக்கப்படவேண்டும் என வலியுறுத்தி மானிப்பாய் சுற்றாடல் சுகாதார விவகாரசபைத் தலைவர் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனருக்கு அவரசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

2000ஆம் ஆண்டில் மானிப்பாய் மத்திய மருந்தகம் அமைக்க 23 பரப்புக்காணி இலவசமாக வழங்கப்பட்ட போதும் கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு இன்று வரை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-29)

## இலவச கணனிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சென்னை தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மூலமாக 'தனா சர்வதேச கல்விச் சேவை நிறுவனம்' பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு மாணவர்களிற்கு இலவசக கணனிக் கருத்தரங்குகளை நடாத்த வுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரியிலும் நண்பகல் 12.00 மணிக்கு ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயத்திலும் நாளை மறுதினம் காலை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் நண்பகல் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலத்திலும் இக் கருத்தரங்கு நடைபெற வுள்ளது.

க.பொ.த.(உ/த) மாணவர்கள், ஆசிரியர்கள், அரச தனியார் உத்தியோகத்தர்கள் அனைவரும் இதில கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(பொன்னாலை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செலவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-49)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்தய மாகாண அரச சுருக்கெழுத்தாளர்,தட்டெழுத்தாளர் சங்கத்தின் 5 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.00மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் ரி. கே.இராஜேந்திரராவ் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித நேய அமைப்பின் முக்கிய கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மனித நேய அமைப்புக்களின் சமகால மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ள இக் கூட்டத்தில் இலங்கை மனித நேய அமைப்புக்களின் ஒன்றிய நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீவன் தியாகராஜா கலந்துகொள்ளவுள்ளார். (உ-16)

★ ★ ★

(பருத்தித்துறை)

முன்பள்ளி ஆசிரியர்களின் வடமராட்சி வலய மட்டக் கூட்டம் இம்மாதம் 28ஆம் திகதி திங்கட் கிழமை பி.ப2.30 மணிக்கு அத்தாய விநாயகர் முன்பள்ளி மண்டபத்தில வட மராட்சி வலய முன்பள்ளி இணைப் பாளர் பி.சுதர்ஜினிதேவி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-52)

## காலை ஆகாரம்

(சாவக்சேரி)

தென்மராட்சிப் பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்க நடவடிக்கைகள். மேற்கொள்ளப் படுகின்றன.

உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இத் திட்டத்தில் கூட்டுறவுச் சங்கத்தினூடாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு உணவுகள் வழங்கப்படவுள்ளன. (உ-29)

## திருக்குறள் மனனப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட தரம்1-5 மாணவர்களிற்கான திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வெற்றிபெற்றவர்களிற்கான சான்றிதழ்கள் அன்றைய தினம் பி.ப 2 மணிக்கு வழங்கப்படவுள்ளன. (உ-29)

## அந்தோனியார் சொரூபம் களவுபோனது

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த அந்தோனியார் சொரூபம் கடந்த சில தினங்களின் முன்களவு போயுள்ளது. இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று முன்னரும் சூசையப்பர் சொரூபம் திருட்டுப் போன சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

இதேவேளை, யாழ். குடா நாட்டிலுள்ள இந்து,கிறிஸ்தவ ஆலயங்களிலுள்ள தெய்வ விக்கிரகங்கள், சிலைகள் தொடர்ந்தும் களவாடப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-51)

## மஹோற்சவம்

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்து டன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 1ஆம்திகதி இரதோற்சவமும், 2ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (உ-52)

## உரத்தின் விலை குறைப்பு

(பருத்தித்துறை)

விவசாயிகளின் நன்மை கருதி யூரியா உரத்தின் விலை 305 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை யாழ்.மாவட்ட கமநலச் சேவை நிலையங்களில் 50 கிலோ யூரியா உரத்தின் விலை 950 ரூபாவாக இருந்தது.

கடந்த 10ஆம் திகதி முதல் இவ் உரத்தின் விலை 645 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. (உ-52)

## ஆலய நிதிமூலம் வைத்தியசாலை புனரமைப்பு

கர்ரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தினால் காரைநகர் கிராமிய வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக மேற்படி வைத்தியசாலையில் அமைந்துள்ள ஆண்,பெண் நோயாளர் விடுதிகள் அனைத்தினதும் கூரைகள் சீரமைக்கப்படுகின்றன.

அடுத்து நோயாளர் விடுதிகளுடன் இணைந்து உணவறை அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதுடன் வைத்தியசாலை ஆவணங்களைப் பராமரிப்பதற்காகவும் அலுவலக பாவனைக்காகவும் 15 ஆயிரம்ரூபா பெறுமதியான அலு மாரி ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (உ-246)

## குடும்பநலசேவை உத்தியோகத்தர் நியமனம்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமிய வைத்தியசாலைக்கும் குறைந்தது ஒரு குடும்நல சேவை உத்தியோகத்தரையாவது நியமிப்பது அவசியம் என வட கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சகல மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர்களையும் அறிவுறுத்தியுளளார்.

மேலும் கிராமங்களிலுள்ள மக்களின் தாய்,சேய் நலப் பிரச்சினைகளை நிவிர்த்தி செய்வதற்கு நகர வைததியசாலைகளிற்கு செல்வதற்குப் போக்குவரத்து சிறப்பாக அமையாத காரணத்தால் கிராமத்திலே தாய்,சேய் நலப் பராமரிப்பு நிபுணர் ஒருவர் கட்டாயம் இருத்தல் அவசியம் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-252)

## மீளக்குடியமர அனுமதிக்கும் படி கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு அம்பன் கொட்டோடை ராஜன் கிராமப் பகுதி மக்கள் தம்மை அப்பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஆனையிறவை விடுதலைப் புலிகள் கைபற்றியதையடுத்து இப்பகுதி மக்கள் வெளியேறினர்.

இங்கு குடியிருந்த சுமார் 30 குடும்பங்கள் அகதி முகாம்களிலும உறவினர் வீடுகளிலும் வசித்து வருகினறமை குறிப்பிடத்தக்கது. (உ-43)

## பண்டிதமணியின் பிறந்ததின விழா

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 105வது பிறந்ததின விழாவும் நூல்வெளியீடும் எதிர்வரும் 27 ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை முப 9.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் பண்டிதை பொன் பாக்கியம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் நல்லைக் குருமணி ஆற்றவுள்ளார்.

கந்தபுராண கலாசாரம் மறுபதிப்பு) நூலை முன்னாள் கல்விப் பணிப்பாளர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் வெளியிட்டு வைகக நூல நயப்புரைகளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு நிகழ்த்தவுள்ளார்.

பண்டிதமணி நூ.வெ. ச. முன்னாள தலைவர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை நினைவுரையை யாழ். சைவ பரிபாலன சபைச் செயலாளர் சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை நிகழ்த்தவுள்ளார். (உ)

## கந்தபுராணப் படிப்பு

(பருத்தித்துறை)

வடமராச்சி கிழக்கு அம்பன் கந்தசாமி ஆலய்த்தில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகின்றது. (உ-52)

## ஜப்பான் விவசாய உதவிகள்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கிலுள்ள விவசாயிகள் பல்வேறு வகையான பயிர்களின் வித்துக்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக 140 மில்லியன் ரூபாக்களை இலங்கை அரசாங்கத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கலாசாரத்திற்கு

**ஏ-9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு விடிவினைத் தருமா? அல்லது அழிவினைத் தருமா? என்ற விவாத அரங்கிற்கு ற.கண்ணா அழிவினைத்தான் தருகிறது என்று தன் வாதத்தினை முன்வைக்கிறார்.**

விவாதஅரங்கு - 3

விவாதம் - 3

# அழிவினைத் தரும் ஏ-9 பாதை

ஏ-9பாதை பண்டைக்காலம் தொட்டும் பேணப் பட்டுவரும் தமிழரின் கலாசாரத்திற்கு அழிவையே தரும் என அடித்துக் கூறலாம்.

தமிழர்கள் தொன்று தொட்டு சிறந்த, கட்டுக் கோப்பான வாழ்க்கை முறையில் தம்மைக்கட்டி வாழ்ந்து வருகின்றனர். வருகின்றனர் என்று கூறுவதைவிட வாழ்ந்து வந்தனர் என்று கூறுதல் பொருந்தும். ஆனால் கடந்த சில வருடங்களாக வடமாகாணத் தமிழ் மக்கள் தம் நடை, உடை, மொழி, பழக்க வழக்கங்கள் என்பனவற்றால் நாகரிகம் என்ற போர்வையில் முற்றாக மாறி வாழ்ந்து வருகின்றனர்.


இத்தனை காலமும் குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பட்ட கலாசாரத்தினுள் வாழ்ந்து வந்த தமிழா வாழ்வினுள புதிய புதிய மாறுதல்கள் திறந்த பாதையினூடே வந்து புகுந்துள்ளன.

இன்று எல்லாத் தமிழ்ப் பெண்களும சேலை அணிகின்றார்களா? தலையிலே பூச்சூடி செல்லும் பெண்களை விரல்விட்டே எண்ணலாம். பாதை திறந்த பின்னர் பிற கலாசாரம் மக்கள் தமிழர் பகுதிக்குத் தடையில்லாது வந்து செல்வதும் தமிழ் மக்கள் பிற தேசங்களுக்கு செல்வதும் சகஜமாகி விட்டது. இத்தனை காலமும் தம் கலாசாரத்திலிருந்து பிறழாத தமிழ் இனம் வழிதவறியது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் பெண்கள் ஆழக்குழி வெட்டிய சட்டை அணிந்தும், காற்றுப்பிடிக்க யன்னல் விட்டும் ஆடை அணியவும், தும்பு, துணிவைத்து நூறு பொக்கற் தைத்து பஞ்சவர்ண நிறத்தில் நீளக் காற்சாட்டை அணிய ஆண்களும் ஆரம்பித்துவிட்டனர். நாகரிகம் என்ற போர்வையில் இன்றைய இளைஞர்-யுவதிகள் செய்யும் அட்டகாசங்கள் அட்டைப்படுத்த முடியாதவை.

கடந்த இரு ஆண்டகளாக ஆண்களின் கரியநிறத் தலைமுடி பல வண்ணங்களில் முளைத்துள்ளது. முன்னால் பாதி, பின்னால் பாதி என்று வர்ணம் தீட்டி அலைகின்றனர்.

யாழ்நகரினுள் ஒரு சில மணி நேரங்கள் அவதானித்தால் திறந்த ஏ-9பாதையின் சீரழிவைக் காணலாம். பிற பிரதேசங்களிலிருந்து வரும் வேற்றின மக்களின் பார்க்கச சகிக்காத ஆடை, அணிகலன்கள் பார்க்கும் தமிழ் இளைஞர்-யுவதிகளின் மனதின் அத்திபாரத்தையே அடியோடு ஆட்டிவைக்கும் நடத்தையாகும். இதனைப் பார்த்து எந்த மனிதன் தான் மாறமாட்டான்? இவையெல்லாம் ஏ-9 பாதை திறந்தபின்னர்தான் தமிழர் கலாசாரத்தினுள் நுழைந்தன. இதனை யாராவது மறுத்துக் கூற முடியுமா?

இதனைவிட சந்திக்குச் சந்தி, தெருவிற்குத் தெரு சாராயக்கடைகள், கள்ளுக் கொட்டில்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுதல் இதனைவட யாழில் இன்று தற்சமய விபச்சாரமும் தலை காட்டத் தொடங்கி விட்டது. பாடசாலை மாணவர்களே சமூகத்தின் முன்னால் சிறிதும் பயமோ வெட்கமோ இன்றி புகைப் பிடிப்பதும், மதுபானம் அருந்துதலும் சில மாதங்களாக அவதானிக்க கூடியதாக உள்ளது.




"ஒருவனிற்கு ஒருத்தி" என்ற தமிழர் கலாசாரம் இன்று காற்றிலே பறக்கின்றது. விபச்சார வழக்கு சமபந்தமாக, வீட்டுப்படியே தாண்ட யோசிக்கும் தமிழ்ப் பெண்கள் பொலிஸ் நிலைய வாசலில் அவமான முத்திரையுடன் அலங்கோலப் படுகின்றனர். யாரோ ஒரு இனத்தவன் முன் தமிழ் மகளே! உனக்கு இந்த நிலை தேவைதானா? பிற மாகாணங்களில் இவையெல்லாம சகஜமாகக் காணபபட்டாலும் தமிழ கலாசாரத்தில் இதுவரை இப்படி ஒரு நிலை காணப்படவில்லை. கடந்த ஓரிரு ஆண்டுகளாகத் தான் இவை மலிந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

ற.கண்ணா
வண்ணார்பண்ணை.

பாதை திறக்க முன்னர் பற்றிரி, புகைப் படக்கருவிகள், ஒளி, ஒலிப் பதிவு நாடாக்கள், தொலைபேசிகள் என்பன தடைசெய்யப்பட்டவை என்பதை ஊரே அறியும். ஆனால் இன்று தடையின் அணை திறந்த பின்னர், இவையெல்லாம் வெள்ளமாக வந்து விட்டன. நீலப் படம், ஆங்கிலத் திரைப்படங்கள், சர்ச்சைக்குரிய படங்கள் இவையெல்லாம் தமிழர் கலாசாரத்தை அழிக்காதா? படிக்கப் போகின்றோம் என்று கூறிவிட்டு (ப:ளூபிலிம்) நிலத்திரைப் படம் பார்த்த மாணவர்கள் எத்தனை பேர்? யாழிலுள்ள பிரபல திரையரங்குகளின் இரவுக் காட்சியாக ஆங்கிலத் திரைப்படங்கள் காட்சிப் படுத்தப்படுகின்றன. இதனைப் பார்ப்பதனாலேயே தமிழ கலாசாரம் பிற கலாசாரத்தினுள தன்னைப் புகுத்திக் கொள்ள முன்னிற்கின்றது போலும். மேலும் இதனை விட சார்ஸ், எயிட்ஸ் என்பனவும் சில காலங்களாகத்தான் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் மிருகங்களை விடவும் கேவலமாகக் கருதப்பட்டு அவர்களது உயிர்கள் செல்லாக் காசுகளாகக் கருதப்பட்டு கொன்று குவிக்கப்படுகின்றன. தமிழர்கள் கேட்க நாதியற்றவர்கள், அவர்களைக் கொன்றாலும் குற்றமில்லை என்ற நிலையில ஒருசில காக்கும் வேலிகளே பயிர்களை வேயும் நிலை தமிழர்களின் பிரதேசத்தில் காணப்படுகின்றது. ஏதும் அறியாப் பிஞ்சுகளே குழந்தைக்குத் தாயாகியும் பாலியல் துஷ்பிரயோகங்களிற்கு உட்படுத்தப்பட்டும் தமது வாழ்க்கையை அழித்துக் கொள்கின்றனர்.

வாகனங்களில் பெண் பிள்ளைகளைக் கடத்திக் கொண்டு செல்லும் கிரிமினல்களிற்குப் பாதையாக ஏ-9 பாதை அமைந்துள்ளமை யாரும அறிந்த உண்மை. இன்று யாழில் இவ்வாறான செயல்கள் எவ்வளவோ அரங்கேறியுள்ளன. இப் பெண்களின் எதிர்கால வாழ்க்கை தான்...?

இவ்வாறான தமிழர் கலாசாரத்தைச் சீரழிக்கும் செயல்கள் எல்லாம் ஏ-9 பாதை திறப்பின் பின்னரே உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன, மலிந்துள்ளன. மூடியிருந்த பாதை திறந்தமை விடிவைத் தரும் என்றால எது எங்ஙனம் பொருந்தும்?

மூடிய குப்பையை கிளறினால் நாறுமே தவிர வாசம் வசாது. மூடியிருந்த பாதை தமிழர் கலாசாரத்தில் மூடி இருக்க வேண்டுமே தவிர, அழிவையே தரும் ஏ-9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு அழிவைத்தர வேண்டிய ஒருவழியாக எம்மினத்திற்கு தேவையில்லை.

---

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி I

(33) குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் போர்க்கால நடவடிக்கைகளின் போது புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுதல் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கையில் முதலில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாது?
1. அப்பிரதேசத்தின் சமூக பொருளாதார முக்கியத்துவம் பற்றிய ஆய்வு.
2. மிதிவெடி நிலைகளை அடையாளமிடல்
3. நிபுணர்களின் மூலம் மிதிவெடிகளை இனம் காணல்.
4. உபகரணங்கள் மூலம் அகற்றல்

(34) மக்களின் சமூக வாழ்க்கையில் அதிக செல்வாக்கை ஏற்படுத்தி அண்மைக் காலங்களில் உயர்ந்த அளவு முன்னேற்றத்தை விரைவாக அடைந்துள்ள துறை எது?
1. ஏற்றுமதி விவசாயம்
2. தகவல் தொழில்நுட்பம்
3. கல்வி
4. சுகாதாரம்

(35) உலக சனத்தொகைக்குப் போதுமான உணவு உற்பத்தியானபோதும் பூமியில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் போதுமான அளவு உணவு கிடைப்பதில்லையெனக் கூறப்படுகின்றது. இதற்குக் காரணமானது
1. உற்பத்தியாகும் உணவில் பல்வகைமையின்மை
2. களஞ்சியப்படுத்துவதில் உள்ள குறைபாடுகளினால் உணவு பெருமளவு வீணாதல்
3. உற்பத்தியாகும் உணவு ஒழுங்குமுறையில் பகிர்வு செய்யப்படாமை
4. சில அபிவிருத்தி அடைந்த நாடுகள் உணவைப் பெருமளவில் நுகர்வு செய்தல்

◆ **பின்வரும் அட்டவணையின் உதவியுடன் 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

| நாடு | எழுத்தறிவு வீதம் | சிசுமரணம் (1000க்கு) | ஆயுள் எதிர்ப்பு (வருடம்) | சனத் தொகை வளர்ச்சி வேகம் | சனத் தொகை (மில்லியன்) | ஒரு தொலைபேசிக்கு மக்கள் | ஒரு தொலைக்காட்சிப் பெட்டிக்கு மக்கள் | ஆள்வீத கலோரி (நுகர்வுக்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 100.00 | 05 | 80 | 0.2 | 125.4 | 1.9 | 1.6 | 2596 |
| B | 100.00 | 06 | 78 | 0.6 | 7.1 | 1.1 | 2.5 | 3562 |
| C | 31.6 | 164 | 44 | 1.9 | 21.2 | 390.0 | 114.4 | 1710 |
| D | 27.0 | 88 | 54 | 2.3 | 21.5 | 174.0 | 354.8 | 2340 |
| E | 37.8 | 110 | 52 | 2.5 | 9.8 | 1212.0 | 119.5 | 2021 |
| F | 89.1 | 14 | 72 | 1.2 | 18.1 | 88.1 | 10.2 | 2226 |

(36) பௌதீக வாழ்க்கைத்தரச் சுட்டி உயர்வாகவும், தாழ்வாகவும் உள்ள இரு நாடுகளை முறையே குறிக்கும் விடை எது?
1. A யும் C யும
2. B யும் C யும்
3. A யும் E யும்
4. B யும் D யும்

(37) சனத்தொகை இருமடங்காவதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும் நாடு
1. A 2. B 3. C 4. F

(38) எதிர்வரும் காலத்தில் முதியோருக்கான நலவிருத்திச் செலவினங்களில் அதிகரிப்பை எதிர்நோக்கும் நிலையிலுள்ள நாடு எது?
1. A 2. B 3. C 4. F

(39) போசாக்கின்மையை ஒழிக்கும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மிகவும் பொருத்தமான நாடு
1. C 2. D 3. E 4. F

(40) தொடர்பாடல் ஊடகங்களின் வளர்ச்சி மிகவும் குறைந்த நாடு எது?
1. A 2. C 3. D 4. E

(1x 40 = 40 **புள்ளிகள்**)

**நாளை சமூகக்கல்வியும் வரலாற்றுக்குமான பகுதி -I இன் விடையுடன், பகுதி -II இற்கான வினாக்களும் வெளிவரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எடுப்பதும் கொடுப்பதும்

லோகமான்ய பாலகங்காதர திலகர் இருந்தார் அல்லவா? அவருக்கு 15 வயதிலேயே திருமணம் நடந்ததாம். மனைவியின் பெயர் 'தபிபாய்' பெரிய குடும்பத்திலிருந்து வந்த பெண்.

அநதக் காலத்தில் திருடர் பயம் அதிகம்.இந்தக் காலத்தில் மட்டும் என்ன? என்று கேட்கிறீர்களா? நீங்கள் கேட்பதும் நயாயம் தான்.இருந்தாலும் இந்தக் காலத்துத் திருடனுக்கும் அந்தக் காலத் திருடனுக்கும் ஒரு முக்கியமான விடயம் உண்டு.

அநதக் காலத்துத் திருடன் நியாயம், அநியாயம் பார்ப்பதில்லை. எதுவாக இருந்தாலும் திருடிக் கொண்டு போய் விடுவான். இந்தக் காலத்துத் திருடன் அப்படி இல்லை யாம். அவனிடம் ஒரு தார்மீக உணர்வுண்டாம். அப்போதி ருந்த கொள்ளையர்கள் எதைக் களவாடினாலும் அரி சியை மட்டும் களவாடுவதில்லையாம் . அப்படி ஒரு கொள்கை. அதனால் தான் அந்தக் காலப் பெண்கள் நகைகளை பத்திரமாக வைக்க வேண்டுமென்றால் அரிசிப் பானையில் போட்டு வைப்பார்கள். வளையல், மூக்குத்தி,தோடு இப்படி எதுவாக இருந்தாலும் அதில் போட்டு வைத்து விடுவார்கள். திருடன் தான் அரிசிப் பானைப பக்கம் போவதில்லையே.

திலகரின் மனைவி தபிபாயும் அதேபோல் தனது ஆபரணங்களை ஒரு அரிசிப் பானைக்குள் போட்டு மூடி வைததிருந்தார். இப்படி இருந்தபோது ஒருநாள் ஒரு பிச்சைக்காரப் பெண் வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்டுக் கொண்டு வந்தாள்.

திலகர் வீட்டுக்கும் வந்து "தர்மம் போடுங்கள் தாயே" என்றாள.அந்த அம்மா தபிபாய் காதில் இது விழுந்தது. உடனே கைநிறைய அரிசியை அள்ளிக் கொண்டு வந்து போட்டார். பாத்திரத்தில் அரிசியை போட்ட பின்புதான் அது பளிச்சென்று கண்ணில் பட்டது. அதாவது அந்த அம்மாவின் வைர மூக்குத்தி ஒன்று அரிசியுடன் சேர்ந்து பிச்சைப் பாத்திரத்தினுள் போய்விட்டது.

இவரின் மனதிற்குள் ஒரே குழப்பம்.பிச்சைப் பாத்திரத்திலிருந்து அதை எப்படி எடுபபது? வாய் திறந்து அதைக் கேட்கவும் கூச்சம். திண்ணையில் உட்கார்ந்திருந்த திலகர் இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தார். மனைவியின் மனதிற்குள் நடக்கும் மௌனப் போராட்டத்தை அவர் புரிந்து கொண்டார். மனைவியைப் பார்த்துச சொன்னார்."தபிபாய்! இது தெய்வ சம்மதம் .அவளுக்குச் சேர வேண்டிய மூக்குத்தி அவளிடம் போய்விட்டது. பிச்சைப் பாத்திரத்தில் விழுந்த மூக்குத்தியை எடுக்கு வேண்டாம்" என்றார்."சரி" என்று கூறிவிட்டு மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் மனைவி வீட்டுக்குள் போய்விட்டாராம்

இந்தக் காலத்திலெல்லாம் இப்படியெல்லாம் நடக்குமா? வெறும் அரிசியைப் போட்டுவிட்டு விவகாரம் செய்து கொண்டிருக்கமாட்டோமா? ஒரு பெரிய மனிதனின் வீட்டுக்குப் பிச்சைக்காரன் வந்தான். " ஐயா! நாங்கள் பிச்சைக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கிறோம். அதற்கு நிதி சேகரிக்கிறோம். அதற்கு நீங்கள் 100ரூபா நிதியுதவி செய்யுங்கள்" என்றான். "அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது போ" என்றார் அவர். "அப்படியென்றால் 50ரூபா கொடுங்கள்" என்றான் இவன். "அதுவும் முடியாது" என்று கூறிவிட்டார். "25ரூபா..." என்று இழுத்தான் இவன்."எதுவும் முடியாது" என்றார் அவர். "சரி.இவ்வளவு பெரிய வீட்டுக்கு வந்து விட்டு வெறும் கையோடு போவது சரியில்லை. அதனால் சும்மா 1ரூபாவாவது கொடுங்கள்" என்றான் அவன்.

ஒரு பைசா கூடத் தரமுடியாது என்றார் அவர்."அப்படியென்றால் நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள்" என்றான் அவன். "என்ன செய்ய வேண்டும்" என்றார். "எங்கள் சங்கத்தில் நீங்களும் உறுப்பினராக சேருங்கள்" என்றான.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## நூற்றுக்கும் மேற்பட்ட முத்துக்கள் மீட்பு

(அம்பாறை)

பெறுமதி மிக்க யானைத் தந்தங்களில் இருந்து பெறப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட முத்துக்களை அம்பாறைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அம்பாறையில் உள்ள உதடவில் வைத்து இம் முத்துக்கள் மீட்கப்பட்டிருப்பதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் ஒன்று கிடைத்ததன் மூலமே இவர்களுக்கு முத்துக்கள் கிடைத்திருக்கலாம் என்றும் இவர்கள் தம்வசமிருந்த முத்துக்களை விற் பனை செய் [illegible] முற்பட்ட வேளையிலேயே கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெ[illegible]த்துள்ளனர். (உ-4,61)

# பஸ் கட்டணத்தை அதிகரிக்கும் எண்ணம் எதுவும் இல்லை

## போக்குவரத்து அமைச்சர் மறுப்பு

(கொழும்பு)

பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கான எந்த. வித நடவடிக்கையையும் தாம் மேற்கொள்ளவில்லையென போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மீண்டும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சர் தனது அலுவலகத்தில் நடத்திய கூட்டத்தின் போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு இது குறித்து மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடைந்ததும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படும் என அரசு அறிவித்ததை அடுத்து பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தீர்மானித்திருந்தது. இதுபற்றி எமக்கும் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தது.

ஆனால் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

பஸ்கட்டணங்களை அதிகரிபபு செய்வது குறித்து பயணிகளின் கருத்துக்களைப் பெற்று பின்னர் அதனை பரிசீலணைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதன்பின்னரே பஸ் கட்டண அதிகரிப்புப் பற்றி தீர்மானிக்க முடியும்.இதேவேளை, தனியார் பஸ் உரிமையாளர்கள் சிலரிடம் அனுமதிப்பத்திரம் இல்லை என்று கூறப்படுகிறது.

அதுமட்டுமன்றி சில சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரங்களை பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பெற்ற அனுமதிப்பத்திரங்களை எல்லாம் உடனடியாக ரத்துச் செய்யும் படி போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன் என்று கூறியுள்ளார்.

(உ-60,10)

# அதிகரித்துவரும் பதற்ற நிலைமை மோதல்களுக்கே வழிவகுக்கும்

## எதிர்வு கூறுகிறது ரொய்ட்டர் செய்திச் சேவை

(ரொய்ட்டர்)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நீண்ட காலத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ள போதிலும் நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று உருவாகும் நிலை ஏற்படாத ஒரு சுழல் காணப்படுவதாக ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தும் பின்தள்ளிவருவது நாட்டிற்கு உகந்தது அல்ல. இதேவேளை, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் நிர்வாக ரீதியாக மேலும் பலப்படுவதற்கே இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பின்னடைவு பயன்படும்.

விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் கடநத இரண்டு வருட காலமாக கடைப்பிடித்துவரும் யுத்த நிறுத்தத்தினால் நாளுக்கு நாள் உல்லாசப்பிரயாணிகளின் வருகை அதிகரித்து நாட்டின் பொருளாதார நிலையில் சற்று மாற்றங்கள் தென்பட்ட போதும் இலங்கையின் பாதுகாப்பு தொடர் பில் பரஸ்பர நம்பிக்கையீனங்கள காணப்படுகின்றன.

இந்த நிலையில் அதிகரித்துவரும் பதற்ற நிலைமைகளால் சிறியளவிலான மோதல்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

(உ-121)

## இராசி பலன்

**24.06.2004**
**(ஆனி 10, வியாழக்கிழமை)**
**சஷ்டி முற்பகல் 9.07 வரை**
**பூரம் முன்னிரவு 7.37வரை**
**இராகுகாலம் 1.25-2.55 வரை**
**சுபநேரம் 7.25-8.55 வரை**

**இரவு நடேசரபிசேகம்**

**மேடம்**
காரிய தாமதம், பணத்தட்டுப்பாடு, அஜீரண ரோகம், எதிர்பாரத நன்மை.

**இடபம்**
தன்னம்பிக்கைக் குறைவு, கற்பனை, மிகுதி, தனவிரயம், புதிய விடயம்.

**மிதுனம்**
மாதர் நட்பு, மனோதைரியம், நற்கீர்த்தி, அன்னியர் சந்திப்பு.

**கடகம்**
அதிக செலவு, மனோசங்கடம், குடும்ப மகிழ்ச்சி, போசனக் குறைவு.

**சிங்கம்**
வெகுமானம், மாதர் நட்பு, போசன சுகம், நல்ல காரியம்.

**கன்னி**
சோம்பல் நிலை, புதிய திருப்பம், தன விரயம், காரிய தாமதம்.

**துலாம்**
ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், தனதானிய சேர்க்கை.

**விருச்சிகம்**
எடுத்த காரியம் கைகூடும், நன்கொடை, நல்ல வரவேற்பு, போசனசுகம்.

**தனுசு**
உத்தியோக பங்கம், கலகம், முயற்சி, தாமதம் ,பிதா சிந்தை.

**மகரம்**
பொருள் விரயம், உடல் நலக் குறைவு, உறவினர் மனஸ்தாபம், திருடர் பயம்.

**கும்பம்**
மனோ சௌக்கியம், செய்தொழில், முன்னேற்றம், பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு

**மீனம்**
விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, மனமகிழ்ச்சி, தேக நலன் முயற்சி பலிதம்.
(பஞ்சாங்க நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**இளவன்**

# சுகாதார சேவைத் தொழிற்சங்க சம்மேளனம் அரசு மீது அதிருப்தி

(கொழும்பு)

சுகாதாரத்துறையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசாங்கம் இது வரைமுறையான தீர்வொன்றை வழங்கவில்லையென சுகாதார சேவைத் தொழிற் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மத்திய அரசாங்கத்தின் சுகாதாரசேவை தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபம் இதுவரை மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்படவில்லை என சுகாதார சேவை தொழிற் சங்க சம்மேளன இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அரச உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சம்பள நிலுவைகள் வழங்கப்படாமை நாட் கூலிக்கு வேலை செய்யும் துறைசாரா ஊழியர்கள் ஆகியோரின் சம்பளத்தை உயர்த்தாமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

எனவே இந்த சுற்றுநிருபம் சுதேச வைத்தியத் துறைக்கும் செயற்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் 1997ஆம் ஆண்டில் இருந்து 2004ஆம் ஆண்டு வரையிலான சம்பள நிலுவை கொடுக்கப்பட வேண்டும் எனறுதெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினைகள் குறித்து தொழிற்சங்க சம்மேளனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக சுகா தார அமைச்சர் நிமால்சிறி பாலடிசில்வா தெரிவித்துள்ளார். (உ-61,10,8)

## தகவல் தொலைத் தொடர்பாடல்

# துறைசார் குற்றச் செயல்களை தடுப்பதற்குச் சட்டமூலம்

(கொழும்பு)

தகவல் தொலைத் தெர்டர்பாடல் துறை சார்ந்த குற்றச் செயலகளைத் தடுப்பதற்கான நகல் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான 'சட்டமும் தகவல் தொழில்நுட்பமும்' என்ற பொது நலவாய மாநாட் டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தகவல் தொலைத் தொடர்பாடல் துறையின் வளர்ச்சியை பயன்படுத்தி இழைக்கப்படும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசர தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

தகவல் தொலைத் தொடர்பாடல்துறை மூலம் வேலைவாய்ப்புப் பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய புதிய பாதைகளை உருவாக்கமுடியும்.

எனவே தகவல் தொலைத் தொடர்பாடல் துறையை ஊக்குவிக்கும் பிரமாணங்கள் அரசியல் யாப்பில் இடம் பெறுவது மிகஅவசியமாக உள்ளது.

இதேவேளை , தகவல் தொழில் நுட்பத்துறையை கிராமங்கள்தோறும் அறிமுகப்படுத்தி அங்குள்ள மக்களும் இதன் நன்மைகளை அனுபவிக்க வேண்டும் என் றார். (உ-60,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய நாடுகளின் ஒற்றுமையை நிலைநிறுத்த 22 நாடுகள் தீர்மானம்

(பீக்கிங்)

ஆசிய நாடுகளிடையே ஒற்றுமை நிலவ நாடுகளுக்கிடையேயான பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என இந்தியா, பாகிஸ்தான் ,சீனா உட்பட 22 நாடுகளின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேறப் பட்டுள்ளது.

சீனாவில் உள்ள குங்டாவோவில் 22ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை மாநாடு நடந்தது. இதில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் உட்பட 22நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஆசிய நாடுகளிடையே ஒற்றுமை வளம்,அமைதி, பாதுகாப்பு நிலவ பிரச்சினைகளை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண வேண்டும் என ஒருமனதாக இதில்13 அம்ச தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

13 அம்சத் தீர்மானத்தில் தீவிரமான அரசியல் ரீதியான பேச்சுவார்த்தையின் மூலம் நாடுகளிடையே பரஸ்பர நம்பிக்கையும் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்த வேண்டும்.

இதன் அடிப்படையில் சர்வதேச மற்றும் பிராந்திய அளவில் சுமூகமான நிலையான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் மாறுபட்ட நிலையில் பொதுவான கருத்தை ஏற்படுத்த முயல வேண்டும்.

ஒருவருக்கொருவர் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுத்தவும் முயற்சிக்கவேண்டும். இவ்வாறு 13 அம்ச தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இந்தியத் தரப்பில் வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் தலைமையில் குழு கலந்து கொண்டது. பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமது கசூரி மற்றும் சீனா, ஜப்பான், பங்களாதேஷ், மலேசியா, இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் , கத்தார் ,தென்கொரியா , குவைத்,பஹ்ரைன், கம்போடியா உட்பட 22நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பை அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவும் இந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தகுதி முறையான முன்னேற்றம் உள்ளபகுதிகளில் இந்த ஒத்துழைப்பு விரிவுபடுத்தப்படும் அங்கு பொருளாதார உதவிகள் வழங்கப்படும்.ஆசிய நாடுக ளிடையே வர்த் தகத்தை பெருக் கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ)



அமெரிக்காவில் ஒட்டிப்பிறந்த இந்த இரட்டைக் குழந்தைகள் வாஷிங்டன் மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாக தனியே பிரிக்கப்பட்டன. அதற்கு முன்பு அக்குழந்தைகளைக் கைகளில் ஏந்தி ஆனந்தக் கண்ணீர் சொரியும் தாய் மெலிசா பக்கில்ஸ்.

50 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட தன் எதிரொலி

# செச்சினியத் தீவிர வாதிகளைப் பிடிக்க ரஷ்யப்படையினர் தேடுதல் வேட்டை

(மொஸ்கோ)

செச்சினியத் தீவிரவாதிகள் ரஷ்யாவின் உள்துறையமைச்சர் உட்பட 50 பேரைச்சுட்டுக் கொன்றுள்ளனர்.ரஷ்யாவின் ஷெட்டியா மாகாணத்தில் உள்ள முக்கியமான அரசு நிறுவனங்களின் மீது 200க்கும் மேற்பட்ட செச்சினியத் தீவிரவாதிகள் பயங்கரமான ஆயுதங்களையும் துப்பாக்கிகளையும் ஏந்தி சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர்.

அங்குள்ள உள்துறை அமைச்சகம்,பெடரல் பார்டர் சேவைத் தலைமையகம் உட்துறை அமைச்சகத்தின் ஆயுதத் தளபாடக் கிடங்கு ஆகியவற்றின் மீது நடத்திய இந்த உக்கிர தாக்குதலில் சுமார் 50 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் ரஷ்ய உள துறை அமைச்சர் அபுகர் காஸடாயெங் பரிதாபமாக உயிரிழந்தார்.மேலும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பலியானவர்களில் 18 பொலிஸார் ,மற்றும் 32 பொதுமக்கள் அடங்குகின்றனர்.

பல்வேறு நகரங்களில் நள்ளிரவு வேளைகளில் நடந்த இந்த உக்கிரத் தாக்குதலில் 50 திற்கும் மேற்பட்ட பொலிஸாரும், பொது மக்களும் பலத்த காயமடைநதுள்ளனர்.

காகலியன் பகுதியில் நடந்த இந்தத் தாக்குதல் குறித்து இங்கு ஷெட் டியா மாகாண அதிபர் முரத் ஷயதிகோவ்,ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுக்கு எடுத்துரைத்துள்ளார்.

மேலும் இந்தத் தாக்குதலை கருத்தில் கொண்டு இங்கு ஷெட்டியா மாகாணத்தில் 3நாட்களுக்கு துக்கதினமாக அறிவிக்கபபட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய பிறகு உளளூர் மக்களின் கார் மற்றும் வாகனங்களை எடுத்துக் கொண்டு செச்சினியத் தீவிரவாதிகள் தப்பித்து ஓடியுள்ளனர்.

இந் நிலையில் தீவிரவாதிகளைப் பிடிப்பதற்கானதேடுதல் வேட்டையும் ,மீட்புப் பணிகளும் மும்முரமாக நடைபெற்று வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (உ)



சீனாவின் குயிங்டோ நகரில் கடந்த செவ்வாய்க கிழமை தொடங்கிய ஆசிய ஒத்துழைப்பு மாநாட்டுக்கு வந்த வெளியுறவு அமைச்சர்கள், பிரதி நிதிகள்.

WORLD NEWS

உலக தரிசனம்

# ஈராக் முன்னாள் அதிபர் சதாமுக்கு மரண தண்டனை வழங்க வாய்ப்பு

## போர்க்குற்ற நடுவர்மன்றம் கருத்து

(லண்டன்)

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றங்கள் நிருபிக்கபட்டால் அவருக்கு மரண தண்டனை வழங கப்படும் என்று போர்க் குற்றநடுவர் மன்றத் தலைவர் சலேம் சலாபி கூறியுள்ளார்.

லண்டனில் பிபிசி செய்திநிறுவனத்திற்கு அவர் அளித்தபேட்டியில்,

ஈராக்கிய சட்டப்படி கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கலாம் ஆனால் ஈராக்கின் தற்போதுள்ள நீர்வாகம் மரணதண்டனையை தடைசெய துள்ளது.இந தத் தடைநீக்கப்பட்டால் கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கமுடியும் அப்போது சதாம் ஹுசைனுக்கும் மரணதண்டனை வழங்க வாய்ப்பு இருக்கிறது.

ஈராக்கில் முந்நாள் ஆட்சியாளர்களுக்கு எதிராக நூற்றுக்கணக்கான ஈராக்கியர்கள் சாட்சியம் அளிக்க முன் வந்துள்ளனர். இவ்வழக்கு விசாரணை முடிய குறைந்தது ஓர் ஆண்டாவது ஆகும்.

சதாம்ஹுசைனை ஈராக்குக்கு கொண்டுவருவது பற்றி பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.யூன் 30தில் ஈராக்கில் இடைக்கால அரசு அமைந்த பின் சதாம் ஹுசைனும் ஏனைய முக்கிய கைதிகளும் ஈராக் சிறைக்கு கொண்டுவரப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளது. (உ)

# ஈரான் கடல் எல்லைக்குள் பிரி. படைகள் அத்துமீறல்

(தெஹ்ரான்)

ஈரான் நாட்டு கடல் எல்லைப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த 8பிரிட்டிஷ் கொமாண்டோ படைவீரர்கள் மீது விசாரணை நடத்தப்படும் என ஈரான் நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

ஈராக்கில் பாதுகாப்பு பணியில் அமெரிக்கப்படைகள், பிரிட்டிஷ் படைகள் ஈடுபட்டுவருகின்றன. ஈராக் எல்லைப்பகுதி அருகேயுள்ள ஈரான் கடல் எல்லைக்குள் நேற்று முன்தினம் பிரிட்டிஷ் படைகள் அத்துமீறி நுழைந்துள்ளன. இதை அறிந்த ஈரான் புரட்சி கரப்படைகள் 8 பிரிட்டிஷ் படைவீரர்களையும் கைது செய்தனர்.மேலும் அவர்களின் மூன்று படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

பிரிட்டிஷ் படைகள் ஈரான் எல்லைப் பகுதிக்குள் ஆயிரம் மீற்றர் தூரம் நுழைந்துள்ளனர். இதைப்பிரிட்டிஷ் படைகளும் முதலில் ஒப்புக் கொண்டுள்ளன.

இந் நிலையில் ஈரான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த பிரிட்டிஷ் படைகள் மீது விசாரணை நடத்தப்படும் என ஈரான் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை அரபிக் மொழி அல்-அலாம் டெலிவிஷன் வெளியிட்டுள்ளது.

இது குறித்து பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜேக்ஸ்ட்ரா டெலிபோன் ஈரான் வெளியுறவு அமைச்சருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.இந்தப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வுகாண முயற்சி செய்வோம் என தெஹ்ரானிலுள்ள பிரிட்டிஷ் தூதர் கூறியிருக்கின்றர். (உ)

# பிரிட்டிஷ் படையினர் ஈராக்கியர் மீது சித்திரவதை

(லண்டன்)

ஈராக் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் படைவீரர்கள் ஈராக்கியரை சித்திரவதை செய்து அவர்கள் இறந்த பிறகு உடலைச் சிதைத்து கோரப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக இராணுவ பொலிஸ் விசாரிக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

இது தொடர்பாக லண்டனில் இருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில்,

ஈராக்கின் அல்-மேஜர்,அல்-கெபீர் நகரங்களில் கடந்த மே மாதம் 15 திகதி பிரிட்டிஷ் படைகளுக்கும் அங்குள்ள தீவிர.வாதிகளுக்கும் மோதல் ஏற்பட்டுள்ளது.அதில் 22தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.பிரிட்டிஷ் வீரர்கள் 6 பேரும் இறந்தனர்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஈராக் தீவிரவாதிகளின் உடல்களில் சித்திர வதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் இருந்ததாக டாக்டர் அடெல் சாலித் மஜீத் கூறினார். கொல்லப்பட்ட ஈராக்கியரின் உறவினர்கள் மருத்துவ மனைக்கு வெளியே கூடியிருந்த நிலையில் சித்திரவதை செய்யப்பட்ட செய்தி பரவி கலவரம் ஏற்படும் சூழல் உருவானது.இதைத் தவிர்க்க உட னுக்குடன் இறப்புச் சான்றிதழ் அளித்தோம் என்றும் மஜீத் கூறியுள்ளார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை பாஸ்ரா முகாமில் உள்ள பிரிட்டிஷ் படைத் தளபதிகள் மறுத்துள்ளனர். (உ)



ஈராக்கில் பணியாற்றிய இராணுவவீரர் கிம்சோங் இல் ஈராக் பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். ஈராக் நாட்டிற்கு தென் கொரிய இராணுவத்தை அனுப்பினால் அவரின் தலை துண்டித்து கொலை செய்வேரம் என்று பயங்கரவாதிகள் மிரட்டியுள்ளனர். கடத்தப்பட்ட தனது மகனின் புகைப்படத்தை வைத்துக்கொண்டு அழும் கிம் சோங் இல்லின் பெற்றோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் - குறள்

# வலம்புரி

## அரசியல் குத்துக்கரணம் மக்கள் மத்தியில் பீதி

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தில் 113 பாராளுமன்ற உறுப்பினர்களே பெரும்பான்மையாகும். 113 ஆசனங்களை தனித்து அல்லது கூட்டாக எந்தக் கட்சி பெற்றுக் கொள்கிறதோ அந்தக் கட்சி ஆட்சியமைப்பதற்குத் தகுதியுடையது. ஆனால் இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத்தில் ஓர் அதிசயம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதாவது, 114 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கொண்ட கட்சிக் கூட்டமைப்பொன்று எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்றது. இதுவே அந்த அதிசயமாகும்.

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்த போது அங்கு 114 பாராளுமன்ற உறுப்பனர்கள் சேர்ந்துள்ளனர்.

அப்படியானால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியன் பக்கத்தில் 111 ஆசனங்களே உள்ளன. இந்நிலையில் எதிர்க் கட்சிகளின் கூட்டமைப்பு அரசாகவும், அரசு எதிர்க் கட்சியாகவும் மாற்ற மடைவதே தற்போதைய களநிலை. எனினும் ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட்ட எந்த எதிர்க்கட்சிக்கும் கிடையாது.

இதற்கான காரணம் பலவாறாக இருந்த போதிலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இருக்கும் வரை இலங்கையில் எந்தவொரு அரசியல் கட்சியும் தனித்துப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற முடியாதென்பது உறுதி.

இதன் காரணமாகவும், எந்தக் கட்சியை நம்பியும் ஆட்சியமைக்க முடியாதென்பதாலும் இலங்கையில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதைவிட எதிர்க் கட்சி வரிசையில் இருப்பதே சிறந்ததென அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கும் போது உதிரிக் கட்சிகள் முன்வைக்கும் நிபந்தனைகளால் பிரதான கட்சிகள் நிலைகுலைந்து போய் உள்ளன. இதனால் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்பது போல அரசியல் நிலைமை உள்ளது.

அதிலும் திடீர் திடீரென அரசியல் வாதிகள் அடிக்கும் குத்துக் கரணம் அப்பா! போதுமடா என்பதாகிவிட்டது. 'யாரைத் தான் நம்புவது' இந்தக் கேள்வி முன்னர் அரசியல்வாதிகள் குறித்து பொது மக்களிடம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்போது மேற்போந்த கேள்வி அரசியல்வாதிகள் குறித்து அரசியல் கட்சிகளிடம் எழுந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மீதான குற்றச்சாட்டுக்கள் அவரின் தனிப்பட்ட விடயங்கள் என்பன, அரசியல் களத்தில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அதேநேரம் கட்சியின் முக்கியஸ்தர்கள் இருவரை கட்சியில் இருந்து நீக்கிய விவகாரம் நீதிமன்றப்படியேறியுள்ளது.

இவற்றால் குழம்பிப்போன ரவூப் ஹக்கீம் ஐக்கய மக்கள் சுதந்திர முன்னணி அரசை வீழ்த்துவதற்குத் தயங்குகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் எதிர்ப்பை சந்திப்பது தற்போது தனது தனிப்பட்ட கௌரவத்திற்கு ஏற்பட்ட இழுக்கை மேலும் மோசமாக்கி விடுமென அவர் கருதுகின்றார்.

இதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. அலிஸாகீர் மௌலானா நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பு ஐக்கிய தேசியக் கட்சியைத் தூக்கிவாரிப் போட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் அந்த அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணாவைத் தானே கொழும்பிற்கு அழைத்துச் சென்றதாக அவர் தெரிவித்துள்ளார். கருணாவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசே அடைக்கலம் கொடுத்து வருகிறதென விடுதலைப் புலிகள் கூறிவருகின்ற இந்நேரத்தில்,

கருணாவை கொழும்பிற்குக் கூட்டிச் சென்றது நானே என அலிஸாகீர் மௌலானா தெரிவித்திருப்பது ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

ஆக, அரசியில்வாதிகளின் அதிரடியான குத்துக் கரணத்தால் பொது மக்கள் குழம்பிப் போயுள்ளது மட்டுமன்றி, பீதியும் அடைந்துள்ளனர்.

# பாராளுமன்றத்தின் பெரும்பான்மைப்பலம் எதிர்க்கட்சிகளின் கைகளிலேயே உள்ளது

## ஐ.தே.க. வின் பேச்சாளர் பெருமிதம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பெரும்பான்மைப்பலம் எதிர்க்கட்சிகளிடமே உள்ளமை இணைந்த எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கையளித்த கடிதத்தின் மூலம் வெளியாகியிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களாக பாராளுமன்றத்தில் இடம் பெற்று வரும் அசம்பாவிதங்களை எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்த கடிதத்தின் மூலம் கண்டிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் கையெழுத்திடுவதற்கு ஆளும் அரசாங்கக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயாராகவிருப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளரான விமல் வீரவன்ச தெரிவித்த கருத்தின் மூலம் அவர்கள் பாராளுமன்ற அசம்பாவிதச் சம்பவங்களைக் கண்டிப்பது தெளிவாக உள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார்.

இதில் கையெழுத்திடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் முனவருவதன் மூலம் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கண்டிக்குமாறு கோரிநிற்கின்றனர்.

அரசாங்கத்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தையைக கண்டித்து விமல் வீரவன்ச இந்த விடயம் தொடர்பாக நம்முடன இணைந்திருக்கின்றார். இதில் கையொப்பமிட ஆளும் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் முன்வந்தால் அதனை நாம் வரவேற்கின்றோம். அத்துடன் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சம்பவத்தைக் கண்டித்து அவர்கள் பேசவேண்டும்.

அவ்வாறு அவர்கள் பேச முன்வருவார்களானால் சம்பவத்துடன்தொடர்புடையவர்களின் பெயர் விவரங்களைக் குறிப்பிட்டு இவர்கள் இதனைச் செய்தார்கள் எனச் சுட்டிக்காட்ட வேண்டும்.

பாராளுமன்றத்தினுள் செயற்பட வேண்டிய முறைகளைக் கடைப்பிடித்து செய்த தவறுகளுக்கு உரிய பலன்களைப் பெறும் அடித்தளத்தை உருவாக்கி பாராளுமன்றத்தைச் சரிபடுத்த முன் வரவேண்டும் என ரந்தெனிய கேட்டுக் கொண்டார். (உ-121)

## புதிய பாகிஸ்தான் தூதுவர் இலங்கை வந்து சேர்ந்தார்

(கொழும்பு)

புதிய பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகராகப் பதவியேற்கும் பொருட்டு கேணல் பசீர் வலி மொஹமட் நேற்று முன் தினம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகருக்கான அலுவலகத்தை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகக் கையேற்றுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களை தளமாகக கொணடு பாகிஸ்தானிய பயங்கரவாதத்தை வளாப்பதற்காகவே பசீர் மொஹமட்டை இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸதானிகராக பாகிஸ்தான் அரசாங்கம் நியமித்துள்ளதாகவும், இவரது நியமனத்தை அரசு இரத்துச் செய்ய வேண்டுமெனவும் இந்திய சஞ்சிகை ஒன்று அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கான புதிய பாகிஸ்தானிய உயாஸதானிகராகப் பதவியேற்கவுள்ள கேணல் பசீர் வலி மொஹமட் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றுள்ளதோடு, போர்மறறும் அரசியலமைப்புக் கல்வியிலும் சிறப்புப் பட்டம் பெற்றவர் என் பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## அரச ஊழியர் சம்பள அதிகரிப்பு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்

### மின்சக்தி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்று குறுகிய காலமாயினும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்கின்ற பெரும் பணியில் ஈடுபட்டுவருகின்றது என மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விளக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான அறிக்கை அடுத்த இருமாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும். அத்துடன் மின்சாரசபை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சையில் 75 வீதம் முடிவடைந்துள்ளது. அடுத்த சில மாதங்களில் இந்த நடவடிக்கை பூர்த்தியாகும் என்றார். (உ-61,8)


**சாயி அருளமுதம்**



நீங்கள் யாரென்பதை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் நிம்மதி பெறமுடியும். தன் பெயரையும் முகவரியையும் தன் வாழ்வின் குறிக் கோளையும் மறந்து ஒரு மனிதனைப் போல் நீங்கள் இருக்கறீகள். இதை உணர்ந்து நீங்கள் யார் என்பதை அறியும் பொருட்டு உங்களுக்குள்ளே ஊடுருவிப் பாருங்கள். அதன் பின்னர் உங்களுக்குப் பாதுகாப்பும் சாந்தமும் கிட்டும். இதற்காக உங்கள் புத்தியைக் கூர்மையாக்குவதுடன் சதசங்கம, ஜபம், தியானம், நமஸ் மரணம் மூலம் உங்கள் உள்ளுணர்வைச் சுத்தம் செய்யுங்கள்.

நன்றி
[illegible]


## சிங்கப்பூர் பிரதமர் நாளை இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அழைப்பை ஏற்று சிங்கப்பூர் பிரதமா ஹேசோக் றொங் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளை இலங்கை வரவுள்ள சிங்கப்பூர் பிரதமர், 27 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருந்து முக்கிய தலைவர்கள் பலருடனும் பேச்சுவார்த்தை நடாத்துவார் என வெளிநாட்டு அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைக்கு வரவுள்ள முதலாவது சிங்கப்பூர் பிரதம மந்திரியான ஹேசோக் றொங், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

சிங்கப்பூரை தற்போதைய நிலைக்கு வளர்த்தெடுத்தவரா கக் கருதப்படும் லீ குவான் யூ முன்னர் இலங்கைக்கு விஜ யம் செய்தபோது, இலங்கையின் வளாச்சியைப் பாாத்து ஆச்சாியப்பட்டு, இலங்கையைப் போல் சிங்கப்பூரை வளாத்தெடுக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கை அப்போதிருந்த நிலையைப் பாாத்து ஆச்சரியப்பட்டிருந்த ல குவான்யூ, அதன்பின்னர் மேற்கொண்ட பொருளா தார மற்றும் அபிவிருத்திப் பணிகளினாலேயே சிங்கபபூர் இன்றிருக்கும் அளவுக்கு வளாச்சியடைந்ததாகத் தொிவிக்கப்படுகிறது. மூன்றாம் உலகிலிருந்து, முதலாம் உலகை நோக்க என்ற தலைப்பிலான தனது புத்தகத்தில் ல குவான யூவே இதனை வெளிப்படையாகத் தெரிவித் திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

### உடத்தலவின்ன படுகொலை வழக்கு

## 3 நீதிபதிகள் குழுவின் தலைவரை பதவி நீக்கக் கோரி மேன்முறையீடு

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை வழக்கினை விசாரணை செய்து வரும் நீதிபதிகள் குழுவின் தலைவரை அப்பதவியில் இருந்து நீக்கக் கோரி மேன்முறையீட்டு மனு ஒன்று கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கின் பிரதான பிரதிவாதியாக முன்னால் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தவே மேற்படி மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல் தினமான 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதியன்று உடத்தல வின்னப் பகுதியில் இடம்பெற்ற வன்முறையில் 10பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பிலான வழக்கு விசாரணைகளை மேல் நதிமன்ற நீதிபதி எரிக்பஸ்நாயக்க தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட குழுவினர் விசாரணை செய்து வருகின்றனர்.

இதேவேளை, இதே போன்றதொரு மனு அனுருத்த ரத்வத்தவினால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்தமையும அதனை உயர் நதிமன்றம் நிராகரித்தமையும் அறிந்ததே. (உ-4,61)

## சுதந்திர ஊடக இயக்கம் மீது அரச ஊடகங்கள் பாய்ச்சல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவிடாது தடுக கும் முகமாகவும் மக்கள் அரசின் மீது வெறுப்படையும் வகை யிலும் சுதந்திர ஊடக இயக்கம் கருத்துச் சுதந்திரத்தை துஷ்பிரயோகஞ் செயவதாக அரச ஊடகங்களில் தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அரச ஊடகங்கள் கடுமை யாக விமர்சித்து வருவதாக வெளியாகும் செய்திக்கு கண்ட னம தொிவிக்கும் வகையில் சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

இந்த அறிக்கைகள் டெயிலி மிரர், ஐலைண்ட் ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளில வெளியாகியிருந்தன.

இது குறித்து அரச ஊடகங்களின் தலைவர்கள் கடந்த திங்கட்கிழமை கூடி ஆராய்ந்த போதே இதனைத் தெரிவித்தார்கள்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

இலத்திரனியல் மற்றும் பத்திரிகைகளைப் பயன்படுத்தி புதிய கூட்டணி அரசாங்கத்தைச் சீர்குலைக்க எதிர்க் கட்சிகள் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு ஆதரவாக சுதந்திர ஊடக இயக்கம் செயற்படுகின்றது என அவர்கள் மேலும் கூறியுள் ளனர். (உ-60,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் தொடர்பில் ஈ.பி.டி.பி. சமர்ப்பித்த மனு [illegible] தான [illegible] ஒத்திவைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பெறுபேறுகள் ரத்துச் செய்யப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி. சமர்ப்பித்த மனுமீதான விசாரணை மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இம் மனுசம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பூர்வாங்க ஆட்சேபனைகளையும் சமர்ப்பித்திருந்தது.

அத்துடன் ஈ.பி.டி.பி. தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய [illegible] சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் இம் மனு சட்டவிரோதமான தெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டத்தரணி ஒருவர் வாதிட்டார்.

இதனையடுத்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்த மேன் முறையீட்டுநீதிமன்றம் சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் அன்றைய தினம் எழுத்த மூல அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுள்ளது.(உ-60)

# மிதிவெடி அபாயத்தை விளக்கி மாபெரும் கண்டனப் பேரணி

## நேற்று கோப்பாயில் இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அபாயக் கல்வி வாரத்தினை முன்னிட்டுக் கோப்பாய்ப் பகுதியில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நேற்றைய தினம் இடம் பெற்றது.

மிதிவெடிகள், கண்ணிவெடிகளைப் புதைக்காதீர்கள் என்ற கோஷத்துடன் கோப்பாய் பகுதி மக்களின ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணியில் கோப்பாய் தெற்கு, இருபாலை, கல்வியங்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இருந்தும் நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நீர்வேலி கந்தசாமி கோவிலில் இருந்தும் முற்பகல் 10 மணிக்கு யாழ்.பருத்தித்துறை பிரதான வீதிவழியாகப் புறப்பட்டு 11.30 மணியளவில் வலி கிழக்குப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன இப் பேரணிக்கான ஒத்துழைப்பினை மனித நேய அமைப்புக்களின் மிதிவெடி அகற்றும் நிறுவனங்கள் கோப்பாய்ப் பிரதேச பொது அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள் ஆகியவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பேரணியில் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

(உ-16,19,37,74

### ரவிகருணாநாயக்கா...

ஆராய்ந்தனர்.

அரசின் அனுமதியுடன் நடந்த இந்த அத்துமீறல் சம்பவம் தொடர்பாக அவர்கள் கண்டனம் வெளியிட்டனர். இது விடயம் சம்பந்தமாக ரவிகருணாநாயக்காவின் வீட்டில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ரவிகருணாநாயக்காவின் வீட்டினை சோதனை செய்யப் போவதாகவும், அவரைக் கைது செய்யப் போவதாகவும் கூறி வீட்டுக்குச் சென்ற பொலிஸார் எந்த ஒரு நீதிமன்ற ஆணையையும் தம்முடன் எடுத்துச் செல்லவில்லை எனவே இது ஒரு அததுமீறல் சம்பவமாகுமென அவர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். (த-121)

### வவுனியா...

வுத்திட்டத்திலிருந்து நிதியொதுக்கீடு செய்வது தொடர்பாக ஆராய்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

இதேவேளை தமது பிரச்சினைகளுக்கு யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் நேரில் வந்து தீர்க்கமான முடிபினைத் தெரிவிக்க வேண்டுமென மாணவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். இதனையடுத்து துணை வேந்தர் இன்றுஅல்லது நாளை வவுனியாவிற்குச் செல்லத் தீர்மானி த்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(ச-)

## இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பகுதியில் உள்ள வடிகால் ஒன்றினுள் நேற்று முன்தினம் காயமடைநத நிலையில் மீட்கப்பட்ட இளைஞன் நேற்று உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த தயாளன் (வயது 23) என்பவரே உயிரிழந்தவராவார்.(த-121)

### பேச்சுவார்த்தை..

காணப்படுகின்றது. இதனால் பேச்சுவார்த்தைகள் காலதாமதமாகி என்றாலும் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு இருக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அமுல் ஆக்குவதுபற்றிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். இரண்டு நாடுகளும் வர்த்தக முதலீட்டு உடன்படிக்கைக்கான கட்டமைப்பைக் கொண்டுள்ளன. இதன் கீழ் பொருளாதார ஒததுழைப்பைத் தொடரவிரும்புவதை அரசாங்கம் விளக்கிக் கூறியிருக்கிறது.

அமெரிக்காவே இலங்கையின் மிகப் பொரிய ஏற்றுமதிச் சந்தையாக விளங்குகின்றது.இரண்டு நாடுகளுக்கிடையே வருடாந்தம் 200 கோடி டொலர்கள் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றன என்றும் கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார்.(த-121)

### கருணாவை..

கப்பட்டுள்ளதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் நீக்கப்பட்ட கருணாவின் வடயம் விடுதலைப் புலிகளின் உள்விவகாரம் ஆகும். இதனால் அந்த அமைப்பே இது தொடர்பான முடிபுகளை எடுக்க வேண்டுமென்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

நாம் ஆட்சியில் இருந்தால் என்ன எதிர்க் கட்சியில் இருந்தால் என்ன இதுதான் எமது நிலைப்பாடு. விடுதலைப் புலிகளுடன் நாம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தபின்னர் அரசும் புலிகளும் நேரடியாகப் பேசி சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர வேண்டுமென்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாகவுள்ளதென்றும் அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### யாழ்...

சனிக்கிழமை இடம்பெறும் பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிபைத் தெரிவிப்பதாகத் துணை வேந்தர் தெரிவித்தார்.

அத்துடன் இடைநிறுத்தப்பட்ட தகுதிகாண் மற்றும் சேவை நீடிப்பு நிலை ஊழியர்கள் வேலைக்குத் திரும்பலாமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர ஊழியர்களால் முனவைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.இதேவேளை இன்று காலை 9 மணிக்கு ஊழியர் சங்கப் பொதுச் சபையைக் கூட்டி ஆராய்ந்த பின்னரே இணக்கப்பாட்டிற்கு வருவது பற்றித்தமது முடிபை அறிவிப்பதாக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம் ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 14ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.(ச-19)

### அலிஸாகீர்...

அடிப்படையில் எனது எம்.பிப் பதவியைத் துறக்க முடிபு செய்துள்ளேன்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னர், தான் மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தேன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணாவுக்கும் இடையே பிளவு ஏற்பட்ட வேளையில் விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைப் பீடத்தில் இருந்து குறிப்பாக தற்போதைய சிறப்புத் தளபதி ரமேஷ் உட்படப் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு கருணாவை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். இதேநேரம் கருணாவும் என்னுடன் தொடர்பு கொண்டு தன்னுடைய நிலைபற்றிக் கூறி, மோதலையும், சகோதரப் படுகொலையையும் தவிர்த்துக் கொள்ள தான் விருமபுவதாகக் கூறித் தனது சகாக்களுடன் கொழும்பிற்குச் செல்ல உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளினதும் கருணாவினதும் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் பாதுகாப்பாகக் கொழும்புக்குச் செல்ல உதவி செய்தேன்.கருணா கொழும்புக்குச் சென்றதும் அவர் என்னுடனான தொடர்புகளை முற்றாகத் துண்டித்துக் கொண்டார்.

இக்கட்டான சூழ்நிலையில் திடீரென என்னுடன் தொடர்பு கொ[illegible]டமையால் என்னுடைய தலைமையுடன் தொடர்பு கொள்ளவோ வேறு எவரிடமோ தொடர்பு கொள்ளவோமுடியவில்லை.

இதனால் இது விடயம் குறித்து எனது தலைமைக்கு அறிவிக்க முடியவில்லை. இதனையே தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் நேற்று விளக்கமாகத் தெரிவித்துள்ளேன் என்று தெரிவித்துள்ள அலிஸாகீர் மௌலானா ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் எந்தப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தாத வகையில் எம்.பி.பதவியில் இருந்து தான் இராஜிநாமாச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.(ம-121)


# உடன் தேவை

## சிற்றூழியர்கள்

## (இரவுக்கடமை)

24-06-2004 வியாழக்கிழமை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்

குறிப்பு: நிறுவனத்தை அண்மித்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்

நிர்வாக உத்தியோகத்தர்.



## தூய ஆவியின் வழிநடத்தலில் வாழ விரும்பும்

இளைஞர்,யுவதிகளுக்கு ஒரு அன்பான அழைப்பு

# அருட்தந்தை போல் ரொபின்சன் அடிகளின்

## வழிநடத்தலில் இரண்டு முழுநாட்கள் தியானம்

**ஜுன் 29 செவ்வாய் காலை 9 மணி முதல் ஜுன் 30 புதன் இரவு வரை**

**யாழ்.மரியன்னை பேராலயத்தில்!**

(துார இடங்களில் இருந்து வருவோர்க்கு உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தேவையானோர் ஜுன 27இற்கு முன்னர் அறிவிக்கவும். இரண்டு தினங்களுக்கும் ஒருவருக்கு கட்டணம் 150 ரூபா)

இளையோராக ஒன்றிணைந்து இறைவார்த்தை கேட்டு இறைபுகழ் பாடி
இறை அனுபவம் பெற்று வாழ்வில்நிறைவும் மகிழ்வும் காண ஒரு அரியவாய்ப்பு

**போல் ரொபின்சன் அடிகளாரின் இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்**
(எல்லோருக்கும் பொதுவானவை)

28.06.2004 திங்கள் மாலை 6 மணி முதல் 9 மணிவரை
**பண்டத்தரிப்பு பத்திமா திருத்தலத்தில்**
29.06.2004 செவ்வாய் மாலை 6 மணி முதல் 10 மணிவரை
**குருநகர் மைதானத்தில்**
30.06.2004 புதன் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை
**யாழ்.மரியன்னை பேராலய வளாகத்தில்**
01.07.2004 வியாழன் கலை 8 மணி முதல் பகல் 12 மணிவரை
**கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில்**

(இருநாள் தியானத்தில் பங்குபற்றும் இளையோர் மாலையில் பொது வழிபாடுகளில் பங்குபெறுவர்)

**இளையோர் ஆணைக்குழுவும்
இறை தியானக்குழுவினரும்**

**தொடர்புகட்கு:
வழிபாட்டு நிலையச் செயலகம்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்**

C-270)



# கண்ணீர் அஞ்சலி

எமது கொத்தணியின் அங்கத்துவ சங்கமான சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர்

## திரு.த.செல்வராசா

அவர்களின் தாயாரான

## அமரர் தம்பிமுத்து நாகம்மா

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்

C-272)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அச். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2004 இல் அச்சிட்டு வெளியிட்